
'லக்ஷ்மி'
பெயர்
சொல்ல மாட்டேன்
பூங்கொடி பதிப்பகம்

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/forum/2

''லக்ஷ்மி''யின்
பூங்கொடி வெளியீடுகளில் சில...

| | |
|---|---|
| அழகின் ஆராதனை | 52.00 |
| அவள் தாயாகிறாள் | 30.00 |
| அவள் ஒரு தென்றல் | 42.00 |
| அவளுக்கென்று ஒரு இடம் | 56.00 |
| இரண்டு பெண்கள் | 27.00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 85.00 |
| இன்றும் நாளையும் | 65.00 |
| உறவுகள் பிரிவதில்லை | 20.00 |
| உயர்வு | 50.00 |
| என் வீடு | 40.00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசுபெற்றது) | 100.00 |
| கடைசி வரை | 25.00 |
| கங்கையும் வந்தாள் | 80.00 |
| கணவன் அமைவதெல்லாம் | 60.00 |
| காஷ்மீர் கத்தி | 30.00 |
| காளியின் கண்கள் | 53.00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 24.00 |
| கைமாறிய போது | 42.00 |
| திரும்பிப் பார்த்தால் | 30.00 |
| தை பிறக்கட்டும் | 21.00 |
| நாயக்கர் மக்கள் | 120.00 |
| நிற்க நேரமில்லை | 38.00 |
| நிகழ்ந்த கதைகள் | 70.00 |
| நீதிக்குக் கைகள் நீளம் | 50.00 |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | 50.00 |
| பவானி | 50.00 |
| புதை மணல் | 50.00 |
| மீண்டும் வசந்தம் | 80.00 |
| மீண்டும் ஒரு சீதை | 42.00 |
| முருகன் சிரித்தான் | 24.00 |
| மோகத்திரை | 32.00 |
| ராமராஜ்யம் | 20.00 |
| ரோஜா வைரம் | 27.00 |
| மீண்டும் வசந்தம் | 80.00 |
| வனிதா | 36.00 |

21855

********************

# பெயர் சொல்ல மாட்டேன்

**1** காவேரி நர்மதா மான்ஷன் என்ற அந்தக் கட்டிடத்திலே இப்போது பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன.

மூன்றாவது தளத்தில் வசித்துக் கொண்டிருந்த சாரதா, தன் ஃபிளாட்டை அரபு நாட்டிலிருந்து சென்னைக்குப் பணத்துடன் திரும்பி வந்ததொரு என்ஜினீயருக்கு விற்றுவிட்டு, முதல் தளத்திலிருந்த மூன்றாவது எண் ஃபிளாட்டை டெல்லிக்கு மாற்றலாகி விட்டதொரு அரசு அதிகாரியிடமிருந்து ஏறக்குறைய அதே விலைக்கு வாங்கிக் கொண்டு விட்டிருந்தாள்.

சாரதாவின் ஃபிளாட் ஒரு பொருள் காட்சி சாலையைப் போலப் படு சுத்தமாக இருந்தது—இதை வாங்கிக் குடி புகுந்தவர்கள் எந்தவித சீர்திருத்தங்களும் செய்து கொள்ளத் தேவையிருக்கவில்லை.

ஆனால் அவள் புகுந்த ஃபிளாட்டோ பலவித பழுதுகளுடன் இருந்தது.

எல்லாவற்றையும் சீர்திருத்தி—சுவர்களுக்குப் புதுச் சாயம் தீட்டி, படுக்கையறையில் ஏ.சி. அமைத்துக்கொண்டு அவள் குடியேறுவதற்குள் கையிருப்புக் கொஞ்சம் அடித்தது. உடல் அயர்ச்சியோ சொல்ல முடியாது. இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு சாயம் அடிப்பவர்களிடமும்...பழுது பார்ப்பவர்களிடமும் அவள் கூச்சலிட்டுக் கொண்டு வளைய வந்து, போதும் போதும் என்றாகி விட்டிருந்தது.

ஆனால் அவளது சிரமம் வீண் போகவில்லை....

கீழ் தளத்தில் வீடு அமைந்து விட்டதால்...முன் போல கடைத்தெருவிலிருந்து திரும்பும்போது...'பல மாடிகள் ஏறணுமே, என்று திகைக்கத் தேவையிருக்கவில்லை. ஒரு சில படிகளைக் கடந்து வராந்தாவிற்குள் நடந்ததுமே...மூன்றாம் எண் முகத்திலடித்தாற்போல் கதவின் மீது பித்தளைத் தகட்டில் பொறிக்கப்பட்டு பிராஸோவில் மின்னிக் கொண்டிருந்தது.

கோடை நாட்களைக் கண்டு அவள் பயப்படத் தேவையிருக்கவில்லை.

முன்னிருந்த மூன்றாவது தளத்து ஃபிளாட்டில் சித்திரை மாதம் துவங்கியதுமே நெருப்புப்போல உஷ்ணம் தலையில் கொட்டிக் கொண்டிருந்தது—இப்போது?

ஜன்னல்களைத் திறந்து வைத்துவிட்டதும் வீடு முழுவதும் ஒரே குளுகுளு.

புதிதாக ஜன்னல்களுக்கு வாங்கிப் போட்டிருந்த திரைச சீலைகளை நோட்டம் பார்த்தபடி அவள் காலை பத்துமணி அளவில் ஸ்டீல் தம்ளரில் சில்லென்ற மோருடன் சாப்பாட்டறை மேஜையருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

ஃபிளாட் முன்பகுதியிலிருந்ததால்....ஜன்னல் வழியே அவளுக்கு சர். சதாசிவம் சாலை நன்றாகத் தெரிந்தது.

போக்குவரத்து நெரிசலில் சாலை திணறிக்கொண்டிருந்த சமயம் அது.

அந்தப் பகுதியில் குடியேறிய பின்...அவள் செய்து கொண்டு வரும் சமூகத் தொண்டினை அசை போட்டபடி மெல்ல மோரை துளித்துளியாகக் குடித்துக் கொண்டிருந்தாள்.

வீட்டை மாற்றி விட்டதைப் பற்றி அவள் நண்பர் மகன் இன்ஸ்பெக்டர் ரங்கனுக்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் ஒரு கடிதம் போட்டிருநதாள்.



அவளது உதவியால்...லாவண்யாவுக்கு மறுவாழ்வு கிடைத்தது. அடுத்தபடி உருவாகி விட்டிருந்த மதுரா அப்பார்ட்மெண்ட் எனும் கட்டிடத்தில் குடியேறியிருந்த சீதா, கோதண்டராமன் என்ற தம்பதிகளிடையே ஏற்பட்ட கொடுமையான பிளவைக் கண்டு மனம் கொதித்து அதில் தலையிட்டு அந்தத் தம்பதியரை இணைத்து வைத்தாள்—அனிதா என்ற அசட்டுப் பெண் வீட்டை விட்டு ஓட முயன்றவளைத் தடுத்துப் பெற்றோரிடம் சேர்த்து வைத்தாள். அதற்குப் பின்னர்...எதிர் ஃபிளாட்டில் குடி வந்த அமிர்தம் தன் மருமகளைப் படுத்திய கொடுமையை ஃபிளாட்டில் உள்ள மற்றவர்களை ஒருங்கு சேரக் கூட்டிக்கொண்டு சென்று கதவைத் தட்டி அமர்க்களம் செய்து பயமுறுத்தி நிறுத்தியதோடு, அந்த அப்பாவி மல்லிகாவுக்கு விவாகரத்து வாங்கித் தந்த தன் சிநேகிதியின் மகன் பாஸ்கரனுக்குத் திருமணம் செய்து வைத்தாள்.

இன்னும் எத்தனையோ...

வயதாகிவிட்டது—முட்டி நோவு—ரத்த அழுத்தம் என்று ஏதாவது சொல்லிக்கொண்டு வீட்டோடு முடங்கிக் கிடக்காது 'என் கடன் பணி செய்து கிடப்பது' என்ற கொள்கையுடன் அவள் செயல்பட்டுக் கொண்டிருந்தாள்.

இதற்கு முன்னர் அந்தக் குடியிருப்புப் பகுதியில் வசித்த ஃபிளாட்வாசிகள் தாமுண்டு தம் வேலையுண்டு என்று நவக்கிரகங்களாக ஆளுக்கு ஒரு பக்கம் திரும்பிக்கொண்டு வாழ்ந்தவர்கள்.

இப்போது எல்லோரும் ஒரு குடும்பம் போல ஒற்றுமையாக வாழ ஆரம்பித்து விட்டிருக்கிறார்கள்.

எல்லோரும் சொந்த பிளாட்வாசிகளாகி விட்டனர்.

அவர்களுக்கு ஒரு சங்கம் அமைத்து—வயதில் மிகவும் சிறியவனான சம்பத்திடம் ஃபிளாட் நிர்வாகப் பொறுப்பைத் தந்து ஆளுக்கு மாதம் இத்தனை என்று பணம் கட்டி

ஃபிளாட்டையும் நெடுஞ்சாலைக்குப் போகும் அவர்கள் தெருவையும் மிக சுத்தமாக வைத்துக்கொண்டு கீழேயிருந்த தொரு சிறு வெற்றிடத்திலே ஒரு சிறு கோயிலைக் கட்டிக் கொண்டு அதில் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்து தினசரி பூஜைக்கு ஏற்பாடு செய்து கொண்டு வாரத்தில் ஒரு நாள் பெண்கள் கூடி பஜனை செய்து நாள் கிழமைகளில் பிள்ளையாருக்குப் பால் அபிஷேகம் செய்து எல்லோரும் மகிழும்படியானதொரு ஏற்பாட்டையும் அவள் தலைமையில் செய்து முடித்திருந்தனர்.

எல்லோரும் அமைதியாக, மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஆனால் சாரதாவுக்குத்தான் மனம் பரபரத்துக் கொண் டிருந்தது.

எங்கேயோ யாரோ ஒரு பெண் அச்சப்படுவது போலவும் அவள் உதவியை நாடுவது போலவும் ஒரு உள்ளுணர்வு அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது.

வாயில் அழைப்புமணி கிணுகிணுத்தது.

டம்ளரை மேஜை மேல் வைத்துவிட்டு எழுந்து சென்று கதவில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி வழியே பார்த் தாள்.

வராந்தாவில் இன்ஸ்பெக்டர் ரங்கன் நின்று கொண் டிருந்தான்.

முகத்தில் புன்னகை பெரிதாக மலர...கதவை வேகமாகத் திறந்தாள்.

"வாப்பா ரங்கா...பார்த்து ரொம்ப நாளாச்சு, இரண்டு மாமியார்கள் இடையே நீ ரொம்ப பிசியாக இருக்கே போலிருக்கு" கேலி செய்தபடி வரவேற்றாள்.

"உங்கள் கடிதம் கிடைச்சுது. உடனே வந்து பார்க் கணும்னுதான் முயன்றேன்... ஆனால்..."



"தெரியும் எனக்கு. உன் வேலையே உனக்கு சமாளிக்க முடியாத அளவு இருக்கு. பரவாயில்லை உட்கார்...புது ஃபிளாட்டுக்கு மாறியிருக்கேன் இது எப்படி இருக்குன்னு உன் அபிப்ராயத்தைச் சொல்... உன் மாமியார்கள் நீலாவும்—ரத்னாவும் இப்போ ஒத்துமையா இருக்காங்களா? மாயா எப்படியிருக்கா?" படபடவென்று பேசிக் கொண்டே முன்னறை சோபாவில் அவனை அமர்த்தினாள்.

"என் மாமியார் நீலா தன் மகளுக்கு ஒரு வீடு வாங்கித் தந்திருக்காங்க.. பழுது பார்க்கின்ற வேலை நடந்து கொண் டிருக்கு...அதிலே நாலு படுக்கை அறைகள் இருக்கு"—சிரித்தான்...

"புரிகிறது... நீலாவும், ரத்னாவும் உன்னோட வந்து தங்கப் போகிறார்கள். அத்தோட உன் அம்மா...இந்த அல்லி ராஜ்யத்தில் நீ அலைப்பட்டுக் கொண்டு முழி பிதுங்கப் போறே"—சிரித்தாள்.

"எப்படியோ எல்லோரும் ஒத்துமையா இருந்தா சரி...

நீலா அம்மா ஒரு மாருதி கார் வாங்கி மகனுக்கு கொடுத் திருக்காங்க."

"பலே பலே. உன் பாடு யோகந்தான்."

"நான் சாதாரண போலீஸ்காரன்—திடீர்னு வீடு, கார் என்றால் சந்தேகத்துக்கு இடமாயிடுமே.. நல்ல வேளை, எல்லாம் என் மனைவி மூலம் வந்த வசதிகள்னு நிரூபிக்க முடியும். அதனால் நான் நிம்மதியா இருக்கேன். மாயாவுக்கு இப்போ தன் தாயார் யார்—வளர்ப்புத் தாய் யார்னு உண்மை விவரம் தெரிஞ்சு போச்சு-அவள் விவரத்தை ஏற்றுக் கொண்டு விட்டாள். இரண்டு பேரிடமும் அன்பா நடந்துக்கிறா... எல்லாம் உங்கள் உதவியால் நடந்த சங்கதி."

"நான் தலையிட்டேன்... காரியம் கெட்டுப் போகாது சுகமா முடிஞ்சுதேன்னு எனக்குப் பரம திருப்தி."

"சாரதாம்மா... நீங்க உதவி செய்யப் புறப்பட்டா அந்தக் காரியம் கட்டாயம் வெற்றியடையும்னு தெரிஞ்ச சங்கதிதானே."

"சரி...முகஸ்துதி போதும்...என்ன சாப்பிடறே?"

"ஒண்ணும் வேண்டாம்...உங்களை எட்டிப் பார்த்துட்டு ஏதாவது உதவி தேவையான்னு கேட்டுட்டு...எங்க புது வீடு தயாரானதும் கிரகப்பிரவேசத்துக்கு வந்து வாழ்த்தணும்னு கேட்டுக்கத்தான் வந்திருக்கேன்."

"நீ கேட்கணுமா ரங்கா...கட்டாயம் வருவேன். கவலைப் படாதே..அதைப்போல நானும் உன்னை ஒண்ணு கேட்டுக் கிறேன்."

"கேளுங்க அம்மா."

"எனக்கு இந்த சமூக சேவையிலே சிக்கல் ஏதாவது ஏற்பட்டாக்க போலீஸ் உதவி தேவைப்படும். நீ எந்தப் பகுதி யிலே வேலை பார்த்தாலும் எனக்கு நீ கட்டாயம் உதவணும்."

"கேட்கவேண்டாம் அம்மா. நான் எப்பவும் தயாரா இருக்கேன்."

அவன் எழுந்து போக நின்றான். சாரதா அருகில் நெருங்கி அவனது சீருடை மீது வயிற்றில் லேசாகக் குத்தி னாள்.

"கொஞ்சம் சாப்பாட்டை நீ குறைச்சுக்கணும். மாயா நன்னா சமைச்சுப் போடறான்னு ஒருபிடி பிடிக்காதே—இந்தச் சின்ன வயசிலே...தொந்தி போட ஆரம்பிச்சாச்சா?"

"இல்லேம்மா...அது சட்டை ஸ்டார்ச் போட்டதிலே விறைப்பா நிக்கிறது. தொந்தி கிடையாது. தொப்பை கிடை யாது. எங்களுக்குத்தான் ஏகப்பட்ட உடல் பயிற்சி வேறே இருக்கே." சிரித்துக் கொண்டு விடைபெற்று வெளியேறி னான்.



கதவை மூடிவிட்டு வந்து உட்கார்ந்தாள்—மீதமிருந்த மோரைக் குடிக்க டம்ளரை எடுத்த போது அவளது பார்வை வெய்யிலில் குடை கூட இல்லாது தகர டப்பாவை இடையில் சுமந்த, சுங்கடிச்சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வேகமாகச் சாலையில் நடந்து கொண்டிருந்த பெண்மணி மீது விழுந்தது.

அப்பளம், வடகம் விற்கும் அலமேலு வருகிறாள். கட்டாயம் அவள் சாரதாவைப் பார்க்கத்தான் வருகிறாள்.

அந்த ஃபிளாட்டில் அவளைத் தவிர அவைகளை வாங்கு கிறவர்கள் கிடையாது. வெய்யில் காலம் வந்துவிட்டால் அத்தனை வீட்டவர்களும் வடகம் பிழிய ஆரம்பித்து விடுவார் கள். அப்பளத்தை வழக்கமாக வாங்கும் கடைகளில் வாங்கிக் கொள்வார்கள்.

பாவம் அலமேலு என்று பரிதாபப்பட்டு அவள் கொண்டு வரும் அத்தனையையும் வாங்கிக் கொண்டு விடுவாள் சாரதா.

எளிய முறையில் உணவைத் தயாரித்துச் சாப்பிடும் அவளுக்கு அத்தனை அப்பளம், வடகம் தேவையில்லை.

அவளை நம்பி எடுத்துக் கொண்டு வரும் அலமேலுவைத் திருப்பி அனுப்ப சாரதாவுக்கு மனம் இருப்பதில்லை.

"இந்தா மருதாயி, உனக்குக் கொஞ்சம் அப்பளம் தரேன். எடுத்துப்போ..." என்று வேலைக்காரிக்கு ஒரு கட்டு தருவாள்.

"வெறும் அப்பளத்தைக் குடுத்தா எண்ணெய் விக்கிற விலையில்..." மருதாயி எடுத்துப்போக ரொம்பப் பிகு செய் வாள்.

"சுட்டுச் சாப்பிடு. நல்லா இருக்கும்" உற்சாகப்படுத்து வாள் சாரதா.

"எடுத்து வையுங்கள். சுட்டுக் கருவாட்டுக் குழம்போட சாப்பிட்டுப் பார்க்கிறேன். எங்க வூட்டுகாரருக்கு நாக்கு ரொம்பவே... அப்பளத்தைப் பொரிக்கக் கூடா தான்னு கேட்பார்" என்றபடி அதை எடுத்துக் கொண்டு போவாள்.

மாதர் சங்கத்து உறுப்பினரில் சியாமளி வயதானவள். அவளுக்குக் கொஞ்சம் அப்பளம், வடகம் இத்யாதிகளைக் கொடுப்பாள்.

இப்படி அலமேலு அம்மாள் பிழைக்க அவள் பலவித முறைகளைக் கையாள வேண்டியிருந்தது.

மோரைப் பருகி டம்ளரை வைப்பதற்குள் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

கதவைத் திறந்தாள். அலமேலு பெருமூச்சுடன் நெற்றியில் வழிந்த வியர்வையைப் புடவைத்தலைப்பால் துடைத்துக் கொண்டு, "என்ன வெய்யில்! தலையைப் பிளக்கிறது" என்றபடி தகர டின்னைச் சுமந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

தன் செருப்புகளை நடையில் விட்டுவிட்டு டின்னுடன் உள்ளே புகுந்தாள்.

"இலை வடாம் போட்டிருக்கேன். உங்களுக்குப் பிடிக்குமேன்னு எடுத்து வந்திருக்கேன். அரிசி அப்பளாம், கொஞ்சம் உளுந்தப்பளாம், ஜவ்வரிசி கருவடாம், முள்ளுக் கழிவடாம் எல்லாம் கொஞ்சம்...கொஞ்சம்" திணறிக்கொண்டு சாப்பாட்டறை மேஜை மீது டின்னை வைத்தாள்.

"கொஞ்சம் ஜில்லுனு ஜலம் தர முடியுமா? நாக்கை தாகம் வறட்டறது" என்றபடி நின்றாள்.

"உட்காருங்கோ அம்மா" உபசரித்தாள் சாரதா.

ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் அவளிடம் கிடையாது. தயக்கத்துடன் அலமேலு சாப்பாட்டறை நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தாள்.



குளிர்ந்த நீரை வேகமாய்ப் பருகிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டாள். தனித்தனியே பிளாஸ்டிக் பைகளில் நிரப்பிக் கட்டிக் கொண்டு வந்திருந்ததை மேஜை மேல் எடுத்து வைத்தாள்.

"எல்லாத்தையும் வெச்சுடுங்கோ. நாற்பது ரூபாயா? இருங்கோ கொண்டு வரேன்" கூறிவிட்டு உள்ளே சென்று பீரோவைத் திறந்து பணத்தை எடுத்து வந்தாள்.

"ஐம்பது ரூபாயா? என்கிட்டே சில்லரை இல்லையேம்மா." மணிபர்சைத் துழாவினாள் அலமேலு.

"பரவாயில்லை. அப்படியே வச்சுக்கோங்க. அடுத்த முறை கணக்கில் கழிச்சுக்கலாம். கொஞ்சம் இருந்துட்டு என்னோட சாப்பிட்டுட்டுப் போறேளா?" கருணையுடன் விசாரித்தாள்.

அலமேலுவுக்குப் பசி வயிற்றைச் சுருட்டியது. வெட்கத்தை விட்டுத் தலையை அசைத்தாள்.

சாரதாவுடன் கூட அமர்ந்து அவள் சமைத்திருந்ததைப் பங்கிட்டுச் சாப்பிட்டு முடித்ததும் எழுந்திருந்து கை கழுவிக் கொண்டாள்.

மேஜையிலிருந்த காலித் தட்டு, தம்ளர்களை எடுத்து சென்று கழுவிக் கொண்டு வந்து வைத்தாள்.

"உங்க ஒருத்தரிடம் தான் நான் உரிமையா சகஜமா பழக முடிகிறது. உங்ககிட்ட சொல்லணும்னே தவிச்சுண்டு வந்திருக்கேன். நீங்கதான் ஏதாவது வழி சொல்லணும்" ஆரம்பித்தாள்.

முன்னறையில் மின் விசிறிக்கடியில் இருவரும் அமர்ந்தனர்.

"சொல்லுங்கோ. முடிஞ்சவரை ஆலோசனை செய்கிறேன்" தூண்டினாள் சாரதா. ஒரு புது பிரச்னை என்றதுமே அவளுக்கு உற்சாகம் பிறிட்டது.

"நான் பெயரைச் சொல்ல மாட்டேன். ஆனால் இதில் உங்க ஆலோசனை ரொம்பத் தேவை."

"சொல்லத் தேவை இல்லை. பிரச்னை என்னன்னு மட்டும் சொல்லுங்கோ."

"இந்த அப்பளம், வடகம் விற்கும் வேலை செய்கிற துக்கு முந்தி நான் ஒரு பெரிய மனுஷர் வீட்டில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தேன். அவருடைய மருமகள் வந்ததும் வீட்டிலே ஒரு கலாட்டா நடந்தது. அந்தப் பொண்ணு தன்னுடைய வைர மோதிரத்தை பீரோவிலேயே வச்சிக் கொண்டு காணாமல் போயிட்டது. யாரோ வேலைக்காரன் எடுத்து அமுக்கிக் கொண்டுட்டான்னு ரகளை பண்ண, வீட்டு யஜமானி என் மேலே சந்தேகப்பட்டுப் பல கேள்வி கேட்க நான் கோபம் தாங்க முடியாம புடவைத் தலைப்பை உதறிக் காட்டிட்டு வேலையை விட்டுப் புறப்பட்டுட்டேன்."

"மோதிரம் வீட்டிலேயே பீரோவில் இருந்ததைப் பார்த்து அந்த வீட்டு அம்மா உங்ககிட்டே மன்னிப்பு கேட்டுக்கொண்டாங்கன்னு சொல்றீங்க."

"மன்னிப்பு கேட்டுக்கொண்டு மறுபடி வேலைக்கு வரச் சொன்னாங்க—நான் மறுத்துட்டேன். அப்பள வியாபாரத்தை ஆரம்பிச்சேன். நான் ஒண்டிக்கட்டை ... கல்யாணமாகிப் பத்து வருஷத்திலேயே அவர் போயிட்டார்—அவர் ஒரு கம்பெனி காண்டீனில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் போனதும் நான் கரண்டியைத் தூக்க வேண்டி யிருந்தது. நான் சொன்ன பெரிய மனிதர் வீட்டிலே இருபது வருஷத்துக்கு மேலே வேலை செஞ்சிருக்கேன்—அப்படியும் என்னை சந்தேகப்பட்டு விட்டாங்களேன்னு மனம் நொந்து போச்சு. ஆனால் அந்த வீட்டுக் குழந்தைகள் மேலே எனக்குப் பாசம் எப்பவும் உண்டு... அது குறையலே..."

"அந்தக் குழந்தைகள் எதுக்காவது உடம்பு சரியில் லாம..." சாரதா மேலும் தூண்டினாள்.



"அது மாதிரி இருந்தால் நான் நடந்ததை மறந்து அங்கே போய் நோயாளிக்குப் பணிவிடை செய்வேன். அவருக்கு ரெண்டு பெண்கள்—ஒரு பிள்ளை. மூத்த பெண்ணைப் பெரிய இடத்தில் கொடுத்திருக்கார். அவ பம்பாயில் தன் புருஷனோட நன்னா வாழறாள்—பைய னுக்குக் கல்யாணமாகிட்டது. இந்தக் கடைசிப் பெண் காலேஜில் படிச்சிண்டு இருந்தது. ஒரு தப்புக் காரியம் செய்துட்டது."

நிமிர்ந்து உட்கார்ந்தாள் சாரதா ... மேலே கேட்க வேண்டுமென்ற ஆவலில் நெஞ்சு படபடத்தது.

"ஏதோ காலேஜ் சிநேகிதியைப் பார்க்கப் போறதாக அடிக்கடி வெளிலே போய்க்கொண்டிருந்துட்டு... ஒரு நாள் சொல்லாமக் கொள்ளாம வீட்டிலிருந்த நகை நட்டோட ஒருத்தரோட ஓடிப்போயிட்டது."

"பெண்ணுக்கு என்ன வயசு இருக்கும்?"

"ஓடிப் போனப்போ வயசு பதினேழு...இப்போ ஆச்சு, பதினெட்டு ரொம்பிப் பத்தொன்பது நடக்கிறது."

"மைனர் பெண்ணைக் கடத்திக்கொண்டு போன குற்றத் திற்கு அவன்மீது கேஸ் தொடரலாமே..."

"குடும்ப மானம் போனது இத்தோட இருக்கட்டும். கேஸ் போட்டு ஊர் உலகம் தெரியறாப்பல நாமே தண் டோராப் போட வேணாம்னு அண்ணாகாரன் சொல் லிட்டான்."

"அம்மா... அவள் அப்படிச் சொல்லமாட்டாளே..."

"என்னைக் கோவில்கிட்டே பார்த்தப்போ ஒரு மூச்சு அழுது—பொண்ணை உசிரோட பறி கொடுத்துட்டேனேன்னு புலம்பினா..."

"பெண் எங்கே இருக்கான்னாவது தெரியுமா?"

"தெரியாம என்ன...இதே ஊரில் இருக்கா. இதில் என்ன வேடிக்கைன்னா அவனுக்கு ஏற்கனவே கல்யாணமாகி நாலு குழந்தைகள் இருக்கு."

"இவளுக்கு ஏதாவது குழந்தைகள்?"

"இதுவரை இல்லை. அது ஒரு புண்ணியமாப்போச்சு. கையோட கொண்டுவந்த நகைகளை விற்று நன்னா மூத்தவளுக்கும் குழந்தைகளுக்கும் செலவழிச்சுட்டான் அந்தப் பாவி."

"இப்போ எல்லோரும் சிரமதசையிலே இருக்காங்கன்னு சொல்லறீங்க..."

"இல்லை...மூத்தவளும் புருஷனும் வேலைக்குப் போகிறவங்க.ரெண்டு பேரும் கை நிறையச் சம்பாதிக்கிறாங்க. இவ வீட்டு வேலைக்காரியாக சமையலிலிருந்து பத்துப் பாத்திரம் தேய்க்கிறவரை எல்லாம் செய்துகிட்டு இருக்கா. யதேச்சையா அப்பளம் விக்கப்போன இடத்தில் இவளைப் பார்த்துட்டேன். கண்ஜாடை பண்ணி...என்னைத் தெரிஞ்சதாக இவங்ககிட்டே சொல்லாதீங்கோன்னு கெஞ்சினா. நான் கண்டுக்காம வடகம். ஒண்ணை வித்துட்டு வந்துட்டேன்."

"இதில் பிரச்னை என்ன?"

"அந்தப் பெண்ணை அவன் கல்யாணம் பண்ணிக்கலை வெறுமனே வச்சுக்கொண்டிருக்கான்."

"கல்யாணம் பண்ணிக்க முடியாது—கழுத்திலே ஒரு மஞ்சச்சரட்டைக் கட்டினா அது கல்யாணமாகாதே..."

"தங்க விக்ரகம் போல இருந்த பொண்ணு—இவன் விட்டிலே வந்து வேலைக்காரியா உழைச்சு ஓடாகிண்டு வரது —பெத்தவங்க ஒன்னும் கேட்க மாட்டேங்கிறாங்க—அவ செத்துட்டா, எங்களுக்கு அவளைப்பத்தித் தகவல் ஏதும் தேவையிலலைன்னு ஒரே முரட்டுத்தனமா அப்பா இருக்கார். அவ அந்தப் பக்கம் வந்தால் காலை முறிச்சுடுவதாக



அண்ணன் சொல்றான். அக்காகாரி இந்த அவமானத்தைக் கிளறணுமா? அவ எக்கேடு கெட்டுப் போகட்டும்னு கடினமாப் பேசறா. அண்ணிகாரி வழுக்கி விழுந்து நாசமானவளை வீட்டுக்குள் சேர்க்க முடியாதுங்கிறா. ஆனால் என் மனசுதான் தவிக்கிறது. நேத்திக்கு நான் வடகம் விற்கப்போறது போலப் போய் அந்தப் பொண்ணு கையிலே இரண்டு ரூபா கொடுத்துவிட்டு வந்தேன். வாசல்ல வர வாழைப் பழத்தை வாங்கிச் சாப்பிடக்கூட அதுக்குக் கையில் ஏதும் கிடையாது. அத்தனை கொடுமையான ஒரு நிலையிலே அகப்பட்டுக் கொண்டு இருக்கா அந்தப் பெண். அத்தோட அவ சொன்ன ஒரு சங்கதியைக் கேட்டு என் உடம்பு சதையெல்லாம் ஆடறது. அதனாலேதான் அவசரமா உங்களைப் பார்க்க ஓடி வந்தேன். இந்த அப்பளம் கருவடாம் விக்கிறதுகூட இன்னிக்கு எனக்கு முக்கியமில்லை."

"உங்க மனசை அப்படி ஒரு பயங்கரம் கலவரப்படுத்திட்டது இல்லையா?"

"சீக்கிரம் ஏதாவது செய்தாகணும். இல்லாட்டா பெரிய மோசம் நடந்துடும் போல இருக்கு."

"சொல்லுங்கோ, சுருக்கமாக. நம்மால ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கிறேன்."

"பெண்ணைப் பத்திதான் சொல்லமுடியும். அவ குடும்பத்துப் பெயரைச் சொல்லமாட்டேன். சொல்லக்கூடாதுன்னு அந்தப் பெண் சத்தியம் வாங்கிண்டு இருக்கா. மைனர் பெண்ணை இழுத்துக்கொண்டு வந்து நாசப்படுத்தியது போறாதுபோல அந்தக் கடன்காரன் இப்போ இன்னொரு அநியாயம் செய்யத் திட்டமிட்டிருக்கான். அவன் வேலை பண்ற நிறுவனத்திலே அவன் விற்பனைப் பகுதியிலே பெரிய உத்யோகம் பார்க்கிறான்."

"நீங்க சொல்லப்போறதை என்னால் ஓரளவு ஊகிக்க முடியறது— ஆனாலும் சொல்லுங்க பார்க்கலாம்."

"வீட்டு வேலை செய்கிறதைவிட அவளை வேறு ஒரு தொழிலுக்கு அனுப்பினா லாபம்னு தோணிட்டது. இதைச் சொல்லிக் கொடுத்தவ அவன் பெண்டாட்டி—தனக்குப் போட்டியா வந்தவளை ஆழக் குழி வெட்டி அதில் அரைப்படி உப்புப் போட்டு உயிரோட புதைக்கப் பார்க்கிறா..."

"அவளை வச்சுக்கொண்டு அந்த வியாபாரம் பண்ண லாம்னு திட்டம்போல இருக்கு."

"சரியாச் சொல்லி விட்டீங்களே? இன்னும் இரண்டு வாரத்திலே அவன் டெல்லிக்கு கம்பெனி வியாபார விஷயமா போறானாம்—இந்தப் பெண்ணைக்கூட வரும்படி சொல்லி யிருக்கான். புதுசா நாலு புடவை—பவுடர்—சோப்பு—செண்ட், லிப்ஸ்டிக் எல்லாவற்றையும் கொண்டு வந்து உன் பெட்டியிலே வச்சுக்கோ....என்னோட வரணும், நான் சொல்ற வரோட ஹோட்டல்ல நீ தங்கி அவருக்குப் பணிவிடை செய் யணும்னு சொன்னானாம்.

"பத்தொன்பது வயசாகிறதே—அவளுக்குப் புரிஞ்சு போச்சு—ஐயோ நான் என்ன பண்ணுவேன். மாட்டேன்னு சொல்லிட்டு எங்கே ஓடுவேன்னு என்கிட்டே ரகசியமாச் சொல்லித் தேம்பி அழுதப்போ எனக்கு உங்க நினைவு வந்தது. 'பயப்படாதே. ஒரு புண்ணியவதி இருக்காங்க. அவங்ககிட்டே சொல்லி ஏதாவது பண்ண முடியுமான்னு பார்க்கிறேன்'னு சொல்லிட்டு வந்தேன். புருஷனும்—பெண் ஜாதியும் வேலைக்குப் போனா சாயங்காலம்தான் வராங்க. குழந்தைகள் பள்ளிக்கூடம் போனா திரும்ப மணி நாலாகிறது. அதுவரை வீட்டைக்கூட்டி துடைச்சு—சமைச்சு—துணி துவைச்சுக் காய வச்சு இஸ்திரி போட்டு வைக்க இவளுக்குச் சரியா இருக்கு. டி.வி. பார்க்கக்கூட முன்னறைக்கு வரக் கூடாதுன்னு அவன் பெண்டாட்டியின் சட்டம். குழந்தை களோ யமன்கள். அம்மா வீட்டில் அவள் எப்படி சீரும் சிறப்புமா வளர்ந்து...இப்போ நாய் படாத பாடுபடறா."



"என்கிட்டே சொல்லிட்டீங்க. இனி கவலையை விடுங்க. அந்த வீட்டு முகவரியும்—பெண் பெயரைமட்டும் சொல்லுங்க. மத்த விவரம் எதுவும் எனக்கு வேண்டாம்" என்றாள் சாரதா.

அலமேலு கண்களில் புரண்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு தான் ஏற்கனவே எழுதி வநத முகவரி கொண்ட கடிதத் துண்டை மேஜை மீது வைத்தாள். "யோகநாதன், சுந்தரமூர்த்தி காலனி, மூன்றாவது எண், மந்தைவெளி" என்றிருந்த முகவரியைத் தன்னுள் பல தடவை படித்துக் கொண்டாள். தன்னுடைய டைரியைத் திறந்து அதில் எழுதிக் கொண்டாள்.

"அப்போ நான் வரேன். ஒரு பாறாங்கல்லை இறக்கி வச்சாப்போல லேசாகிட்டது என் மனசு" என்றாள் அலமேலு.

"அதை என் மனதில் தூக்கி வச்சுட்டீங்கோ. ஒரு சின்னப் பெண்ணுக்கு இப்படி ஒரு அநியாயம் இழைக்கப்படுகிறது என்பதைக் கேட்டு என் மனம் கோபத்தில் எப்படிக் கொதிக் கிறது. அவளது துயரச் சுமையை என்னால் உணர முடிகிறதே" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் சாரதா.

இரவு படுக்கைமீது புரண்டபடி அவள் வெகுநேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணுக்கு யோகநாதன் இழைக்கப் போகும் கொடுமையை நினைத்தபோது ஏ.சி. அறையில் கூட அவளுக்கு வியர்த்துக் கொட்டியது.

விவரம் புரியாத ஒரு இளம் பெண்ணைக் காதல் என்று சொல்லி ஏமாற்றி விட்டிருக்கிறானே ஒரு பாதகன்.

கல்லூரியில் படிக்கும் பெண்களுக்குக் காதலைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்வதற்கு முன், சமுதாயத்தின் சட்டங் கள் பற்றித் தெரியவேண்டியது அவசியமல்லவா!

ஒரு மனைவி இருக்கும் போதே...இப்படி ஒரு துஷ்ட காரியத்தை செய்திருக்கிறானே கயவன்.

பெற்றவர்கள் இப்படிக் கல் மனம் படைத்தவர்களாக இருப்பது நியாயமா?

புகலிடம் இல்லை என்று வரும்போது ஆபத்தில் அகப் பட்டுக் கொள்ளும் பெண்கள் மீள முடியாது அழிந்துபோய் விடுகிறார்கள். ஹூம், இந்த இளம் பெண். அவள் பெயரைக் கூடச் சொல்லாது போய்விட்டாளே அலமேலு. இருக்கட்டும், கண்டுபிடிப்பது சிரமம் இல்லை. அவளை அழியவிடக்கூடாது. இந்தச் சகதியிலிருந்து காப்பாற்றி விடவேண்டும்.

ஆமாம். எப்படி ஆரம்பிப்பது?

யோசித்து...சாரதாவுக்குத் தலைவலியே வந்துவிட்டது.

நடு இரவுக்குமேல் ஒரு தலைவலி மாத்திரையை விழுங்கி விட்டு வேலைக்காரி மருதாயி வந்து கதவை இடிக்கும்வரை தன்னையறியாது உறங்கி விட்டாள்.

## 2

தோட்டத்துக் கிணற்றடியில் ஒரு பெரிய வாளித் தண்ணீரில் சோப்புப்பவுடரைப் போட்டுக் கலக்கிக் கொண்டிருந்தாள் மனோகரி.

பக்கத்தில் ஒரு மூட்டை அழுக்குத் துணி அவளைப் பயமுறுத்திக் கொண்டு கிடந்தது.

முன்பின் இப்படி உடம்பை சக்கையாக்கிக் கொள்ளு மளவில் அவள் உழைத்ததே கிடையாது.

அப்பாவுக்கு மிகவும் அருமையான கடைக்குட்டி என்று செல்லம் கொடுத்து சொகுசாக வளர்க்கப்பட்டாள்.

காதல் என்று அவள் தன் தலையில் தானே கொள்ளி வைத்துக் கொண்டு விட்டிருந்தாள்.



கண்ணுக்கு அழகாகத் தெரிந்த யோகநாதனுடன் பீரோவிலிருந்து தன் நகைகள் அத்தனையையும் அள்ளிக் கொண்டு வீட்டுக்கு வைத்திருந்த செலவுப் பணத்தையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டிருந்தாள். அது நடந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டதென்றாலும் அதனால் ஏற்பட்ட படிப்பினை எத்தனை?

அவளது பணத்தைக் கொண்டே ஒரு பட்டுச்சேலையும் தங்கத் தாலியும் மஞ்சள் சரடும் இரண்டு மாலைகளும் வாங்கிய யோகநாதன் மைசூருக்குப் போகும் வழியில் ஒரு கோயிலில் அவளுக்கு மாலை அணிவித்துத் தாலியைக் கட்டி மனைவியாக்கிக் கொண்டான்.

தேன்நிலவை மைசூரில் கழித்துவிட்டு வீடு திரும்பிய போதுதான் அந்தத் திடுக்கிடும் உண்மை தெரிந்தது.

“வாங்க...அவளை வலது காலை எடுத்து வச்சு உள்ளே கூட்டி வாங்க. ஆரத்தி சுத்தி அழைக்கிறேன்” என்று எதிரே வந்த சண்பகம் கோபாவேசமாக பத்திரகாளியாகி நின்றாள். “நாலு பிள்ளைகளைப் பெத்துப் போட்டுட்டு உங்களுக்கு ஒரு சின்ன வீடு கேட்கிறதா? உங்க வண்டவாளத்தை என் தம்பி வந்து நாலு நாளைக்கு முன்னாடியே சொல்லிட்டான்” கத்தினாள் ஆத்திரமாக.

அன்று ஞாயிற்றுக்கிழமை—அவன் அலுவலகத்திற்குப் போகத் தேவையிருக்கவில்லை. அடுக்கடுக்காக இரண்டு வயது வித்தியாசத்திலே பன்னிரண்டு வயதில் ஆரம்பித்து.. நான்கு பிள்ளைகள்...பள்ளிச் சிறுவர்கள் மாடியறையிலிருந்து தடதடவென்று இறங்கி வேடிக்கை பார்க்க வந்துவிட்டனர்.

“உதை விழும். எல்லோரும் மாடிக்குப் போய் இருங்க—நான் கூப்பிட்டப்ப வந்தாப் போறும்...” கூச்சலிட்டாள் சண்பகம்.

“அக்கம் பக்கத்துக்குக் கேட்க வேண்டாம்—இது நம்மை பத்தின சங்கதி...” கையெடுத்துக் கும்பிடாத குறையாக யோகநாதன் கெஞ்சினான்.

"மைனர் பொண்ணைக் கடத்திக்கிட்டு வந்ததாக... கம்பி எண்ணணுமா உங்களுக்கு? இப்படி ஒரு சபலம் இருக்கும்னு நான் கனவிலே கூட நினைக்கலே..." கத்தினாள்.

"தெரியாம செஞ்சுட்டேன். மோகம் தலைக்கேறிச் செய்யக் கூடாத தவறை செஞ்சுட்டேன். சண்பகம். மன்னிச்சுக்கோ...." தாடையில் போட்டுக் கொண்டான் கணவன்....

"ஊர் உலகத்துக்குத் தெரியாம இந்த மோசடியை மறைக்கணும்னா நீங்க ஒண்ணு செய்யணும். இவளை இப்பவே திருப்பி அவ வீட்டுக்கு உதைச்சு அனுப்பிடணும்."

"அய்யய்யோ! பெரிய வம்பாகிடுமே...இவ பெரிய இடத்துப் பொண்ணாச்சே...."

"அப்ப இன்னொண்ணு செய்யணும். இதுவரை இவளோட கொண்டாடின தேன்நிலவுக்கு இன்னியோட முற்றுப்புள்ளி வச்சாகணும்—யாராவது தேடிக்கிட்டு வந்தா நிலைமையை நான் சமாளிக்கிறேன்—பின்னாடி அறையிலே இவ தங்கிக்கிட்டும்."

"வேலைக்காரிக்குனு நாம கட்டின அறை. அதிலேயா?"

"வீட்டை விட்டுத் திருட்டுத்தனமா கல்யாணமானவனோட ஓடி வந்தா வீட்டுக்காரியாகிட முடியுமா? வேலைக்காரியாத்தான் இருக்கணும். ஏண்டி உன் பேர் என்ன? மனோகரியா? முகரக்கட்டை! வெட்கம் மானமில்லாம இந்த மனுஷனை நம்பிப் புறப்பட்டிருக்கியே. நீயும் ஒரு பெண்ணாடி? பேசாம உன் சாமான்களை எடுத்துகிட்டு...ஒரு டாக்ஸியிலே ஏறி உன் வீட்டுக்குப் போய்விடறியா..."

"ஐயோ முடியாது—என் வீட்டிலே என்னைக் கொன்னு போட்டு விடுவாங்க. இவர் கையால தாலி கட்டியிருப்பதாலே..."

"தாலியா? அது செல்லுபடியாகாது. நான் ஒருத்தி உசிரோட இருக்கேனே. இத்தனை நாள் இவரோட வைப்பா இருந்தே. வெட்கம் கெட்டவளே, இப்போ இங்கே வேலைக்காரியா இருந்து தொலை... தப்பித்தவறி என் புருஷன்கிட்டே பேசினியோ மென்னியை முறிச்சிடுவேன். யாராவது வந்து கேட்டா நீ வேலைக்காரியா இங்கே வந்து சேர்ந்திருக்கிறதாகச் சொல்லணும். தவறிப்போய் கதையை மாத்தினியோ உன் கதை தீர்ந்துடும்."



அப்பொழுதுதான் மனோகரிக்கு ஒரு உண்மை தெரிந்தது. யோகநாதன் தன் மனைவிக்கு ரொம்பவே பயந்தவன் என்று. அந்தச் சில நாள் கேளிக்கையோடு அவள் வாழ்க்கை மண்ணாகி விட்டது.

அடிக்கடி அவளுக்கு ஒரு எண்ணம் எழும். அங்கிருந்து ஓடித் திரும்பப் பெற்றவர்களிடம் போய்ச் சேர்ந்து விட்டால்...

"என் மகள் காணாமல் போய் விட்டாள்" என்று கவலையே படாத அந்தக் கருணை இல்லாத கூட்டத்தில் எப்படிப் போய் சேர முடியும்?

அவர்களுக்குக் கௌரவம் பெரிதாகி விட்டிருந்தது—

அவள் போட்டிருந்த அத்தனை நகைகளையும் சண்பகம் மிரட்டிக் கழற்றி வாங்கிக் கொண்டு விட்டாள்.

விலை உயர்ந்த புடவைகளையும் எடுத்துக் கொண்டு விட்டாள்.

காதில் போலி முத்துத் தோடும்—கைகளில் கண்ணாடி வளைகளும்—கழுத்தில் பவள மாலையுமாக—இடையில் சண்பகம் விட்டெறிந்த பழைய கிழிந்த புடவையுடன் அவளது கோலமே மாறிப் போனது.

'கண்ணே—மணியே' என்று காதல் பேசின யோகநாதன் மனைவியுடன் கூடிக் கொண்டு அவளை மிகவும் கேவலமாக நடத்தினான்.

இந்தக் கொடுமையை யாரிடம் சொல்வது என்று புழுங்கிக்கொண்டிருந்த போதுதான் ஒருநாள் அவள் எல்லோ

ரும் வெளியே போன பின்பு—வீட்டைப் பூட்டி விட்டுப் பக்கத்தில் மருந்துக் கடைக்குச் சென்று கடை தொலை பேசியை உபயோகித்து அண்ணியுடன் தொடர்பு கொண் டாள்.

அண்ணி கோகிலாவுக்கு அவளை எப்பொழுதுமே பிடிக் காது. வீட்டை விட்டு ஓடிவிட்டாள் என்று ரொம்பவே வெறுப்பு.

"கேள்விப்பட்டார் மாமா. நீ கல்யாணமானவனோட குடித்தனம் பண்றதாக யாரோ சொல்லித் தெரியும். அவன் எவன், எங்கே இருக்கிறே நீ என்றெல்லாம் தெரிந்து கொள்ள மாமாவும் அத்தையும் விரும்பலை. உங்கண்ணாவுக்கும் எனக்கும்...நீ இறந்து போனதுக்குச் சமம். அடிக்கடி போன் செய்து தொந்தரவு பண்ணாதே. கெட்டழிஞ்சவளை வீட்டில் சேர்க்க கூடாதுன்னு மாமா திட்டவட்டமா சொல்லிட்டார். நீ சும்மாவா ஓடினே? உன் பங்குக்கு உண்டான நகையோட ஓடினே."

"இப்போ நான் பரதேசியாட்டமா...நம்பி வந்தவனால் மோசம் பண்ணப்பட்டு ரொம்பக் கஷ்டப்படறேன் அண்ணி" விசும்பினாள் அவள்.

"நீயா தேடிக்கிட்ட அவலம். அவ்வளவு தான் சொல்வேன்."

"அம்மாகிட்ட பேசணும் போல இருக்கு."

"அவங்க போன் கிட்டவர மறுக்கறாங்க."

அதற்குள் கடைக்காரர் கெடுபிடி செய்தார். "என்னம்மா அங்கே, போனில் எத்தனை நேரம்?" இரைந்தார்.

சட்டென்று போனை வைத்துவிட்டு ஒரு ரூபாயை அவ ரிடம் நீட்டிவிட்டு வீடு திரும்பினாள்.

அந்த ஒரு ரூபாய் காசைச் சேர்க்க அவள் பட்ட பாடு!



பிள்ளைகளின் சட்டையில் கிடந்த சில்லரை பத்து பைசா—இருபது பைசா என்பதை எடுத்து ஒருபுறமாக வைத்து இரண்டு வாரகாலமாகச் சிறுகச் சிறுகச் சேர்த்த காசு அது.

சண்பகம் தானே கடைக்குச் சென்று சாமான்களை விடு முறை நாட்களில் வாங்கி விடுவது வழக்கம்.

பத்துக் காசைக்கூட அவள் பாராது எங்கேயும் வைத்து விடமாட்டாள்.

அவளது அட்டகாசமான மேற்பார்வையில் இயங்கிய அந்த வீட்டில் ஒரு ரூபாய்க் காசை அவள் திருடிச் சேர்த்தது மிகவும் அதிசயமே.

பின் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு வேகமாக வெளியே வந்தாள் சண்பகம்...

"டி.வி. மாடல் போல சோப்புத் தூளைப் போட்டுக் குழப்பிக் கொண்டு என்ன வேடிக்கை காட்டற? மளமளன்னு துணிகளைத் துவைத்து வாளியில் போட்டு நனைச்சிட்டு உள்ளே வா. நாங்கள்ளாம் வேலைக்குப் போக வேண்டாமா? குழந்தைகளுடைய சீருடைகளை எடுத்துக் கொடுத்து அவங் களைப் பள்ளிக்கூடம் அனுப்ப உதவாம இங்கே வந்து உட்கார்ந்திருந்தா..." கத்தினாள்.

ஒரு தடவை அவள் அலுவலகம் புறப்படுமுன் அவசரப் பட்டாள் என்று தட்டில் தோசை மீது சூடான சாம்பாரைப் பரிமாறியபோது ஒரு சொட்டு கைமேல் விழுந்து சுட்டு விட்டதும் சண்பகம் எழுந்து...எச்சில் கையாலே ஒரு பலமான அறையைக் கன்னத்தில் கொடுத்தாள். பல் எல்லாம் உடைந்து கீழே விழுந்து விடும் போன்ற அந்தப் பலமான அடியில் கன்னம் சிவந்து...காது குப்பென்று அடைக்க... வலி தாளாது, 'அம்மா' என்று அலறி விட்டாள்.

"சண்பகம்" என்று இடையே புகுந்த கணவனை எரித்து விடுவது போலப் பார்த்தாள் மனைவி.

"இவ சங்கதியிலே இனிமேலே நீங்க தலையிடுவதில் லேன்னு சொன்ன பிறகு... எதுக்குப் புலம்பறீங்க?" பற்களைக் கடித்துக் கொண்டு உறுமினாள்.

பொட்டென்று அடங்கிப் போனான் யோகநாதன்.

"போ — தரித்திரம். அழுதுகிட்டு நிக்காதே" — தன் பங்குக்கு இரைந்தான்.

அவர்கள் இல்லாதபோது...வெளித் தோட்டத்தில் வந்து சிறிது நேரம் செடி கொடிகளைப் பார்ப்பதுடன் சரி. மற்றபடி அவளது வாழ்க்கை ஒரு பெரும் சிறையாகி விட்டிருந்தது.

சோப்பு நுரை படிந்த கைகளைக் கழுவிப் புடவையில் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

"இந்தா...என் ஷுவுக்குப் பாலிஷ் போட்டுக் கொடு. காலையிலேயே எடுத்து வைக்கச் சொன்னேன். மறந்து போயிட்டே" என்று மூத்தவன் மாடிப்படிகளில் நின்றபடி பள்ளிக் கூடத்திற்கு அணிய வேண்டிய பாதணிகளை அவள் மீது விட்டெறிந்தான்.

"அம்மா என் சீருடையை இவ எடுத்து வைக்கலை" கடைக்குட்டிப் பிள்ளை ஊளையிட்டான்.

"எல்லோருக்கும் சீக்கிரம் டிபன் கட்டி வை" தன் பங்கிற்கு அதிகாரம் செய்தான் யோகநாதன்.

எல்லாவற்றையும் செய்து முடிப்பதற்குள் அவளுக்குக் கையும் காலும் சோர்ந்து போயின.

காலையில் காப்பி டிபனுக்குப் பின் எல்லோரும் கையில் தயிர்சாதம் எடுத்துப்போய் விடுவது வழக்கம்.

பின்னர் இரவுதான் சமையல்.

சில சமயம் கடைக்குட்டிப் பையன் பகாசூரன்போல அவளுக்கு என்று எடுத்து வைத்திருந்த இரண்டு இட்லிகளையும் கேட்டுத் தட்டில் போட்டுக்கொண்டு விடுவான்.



சண்பகம் மகா பொல்லாதவள். சாமான் அறையைப் பூட்டிவிட்டுப் போய் விடுவாள். பிரிட்ஜில் தண்ணீர் பாட்டில் களும் காய்கறிகளும்தான் இருக்கும்.

பசி வயிற்றைக் குடையும்போது மனோகரி தண்ணீர் தான் கொஞ்சம் குடித்துக் கொள்ள முடியும்.

குழந்தைகள் பள்ளிக்கூடம் போனதும்—கணவனை வேலைக்குத் தங்களது பழைய பியட்டில் அனுப்பிவிட்டுத் தோளில் பையை மாட்டிக்கொண்டு காலில் செருப்புகளைத் திணித்துக் கொண்டபடியே சண்பகம் அவள் பக்கம் திரும்பி னாள்.

"அடுப்பு மேடையிலே கிண்ணத்திலே தயிர் வச்சிருக் கேன்—அதைப் போட்டுக்கிட்டு சோற்றைத் தின்னு. ரெண்டு வாரத்திலே உடம்பைக் கொஞ்சம் தேத்திக்கோ. இந்த மாசக் கடைசிலே ஒரு சமயம் எங்களோட நீ ஹைதராபாத்துக்கோ—கல்கத்தாவுக்கோ வரவேண்டியிருக்கும்" என்றாள். அவள் சென்றதும் கதவைத்தாளிட்டு உள்ளே திரும்பியவள்...நெஞ்சு படபடக்க அப்படியே சுவரில் சாய்ந்தபடி நின்றுவிட்டாள்.

சில நாட்களுக்கு முன்னர் நடு இரவின்போது தாங்க மாட்டாத தாகத்துடன் அவள் மெல்ல எழுந்து சமையல் அறை அருகே வந்தாள்.

சண்பகம் வீட்டிலிருக்கும்போது அவள் பிரிட்ஜைத் திறந்து தண்ணீர் எடுத்துக் குடிக்கக்கூடாது என்ற உத்திரவு.

அடுப்பு மேடை மேலிருந்த அண்டாவிலிருக்கும் தண்ணீரை ஓசைப்படாது மொண்டு எடுத்து ஒரு டம்ளர் பருகிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டு மெள்ள வெளி வந்தாள்.

முன் அறையில் கணவனும், மனைவியும் உட்கார்ந்து கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருப்பது அவள் காதில் பட்டது.

"நீங்க உங்க ஆபீஸ் ஃபைல்களை மாடியிலே நம்ப அறையில் வச்சுப் பார்க்கலாம். இங்கே ஏன் உட்கார்ந் திருக்கீங்க?"

சண்பகம் முணுமுணுப்பது கேட்டது.

"உனக்கு என்னைப்பத்தி ரொம்ப சந்தேகம். நான் காரணமில்லாம உன்னை இங்கே கூட்டிக் கொண்டு வரலை. பெரியவன் பரீட்சைக்குப் படிக்கிறான்—அவன் காதிலே பட்டுத் தொலைஞ்சா... விவரம் ஒரெழவும் தெரியாத பிள்ளை அவன்...ஏதாவது விளையாட்டுப் போக்கிலே உளறிட்டா? இந்தக் கடைசி ஃபைலிலே கையெழுத்துப் போட்டதும் சொல்றேன். ஒரு நிமிஷம் இரு" என்று யோகநாதன் கூறியது கேட்டது.

"சொல்லுங்க. ரொம்ப ஸஸ்பென்ஸ் தேவையில்லை" மிரட்டினாள் மனைவி.

"நான் அடிக்கடி வெளியூர் பயணங்களுக்கு வியாபார சங்கதியாப் போக நேர்கிறது. அப்போ கம்பெனி கொடுக்கிற பணம் பத்தாது போய்த் தொலைக்கிறது—வியாபாரத்தை விருத்தி செய்து பிரமோஷன் வாங்க நான் எத்தனையோ பாடுபடறேன்."

"உங்க கம்பெனி பொருள்களை வாங்க ஒப்புக்கிறவன் களுக்குப் பெரிசா டின்னர் கொடுத்துத் தொலைக்க வேண்டி யிருக்குன்னு கஷ்டப்படுகிறீங்க."

"வெறும் டின்னரோடவா போகிறது?"

"நீங்க சொல்றது புரிகிறது. புட்டி...எட்ஸெட்ரா எதிர் பார்க்கிறான். ஊரெங்கும் போய்த் தேடவேண்டாம்—கை வசம் இருக்கிறவளைப் பயன்படுத்திக்கலாம்னு சொல்றீங்க. ஓ. கே. ஆனா உங்க ரெண்டு பேரையும் தனியா அனுப்பி வைக்க நான் என்ன மடைச்சியா?"

"வேண்டாம் சண்பகம்... இந்த மாசக் கடைசியிலே ஒரு பெரிய புள்ளியை ஹைதராபாத்தில் சந்திக்கப் போறேன்—நீ



லீவு எடுத்துகிட்டு என்னோட வா...கூட மனோகரியைக் கூட்டிக் கொண்டு போவோம்."

"இந்தத் தடவை இப்படிச் செய்யலாம். என்னைக் கேட்டா...ஒரு நல்ல சான்ஸாப் பார்த்து இவளைப் பம்பாய் பக்கம் தள்ளிட்டா நம்மைப் பிடிச்ச பீடை விடும்."

"அதைப் பத்தியும் பேசி வச்சிருக்கேன். அடுத்த மாச வாக்கிலே ஒரு பம்பாய்க்காரி இந்தப் பக்கம் வரா. மனோ கரியை அவள் பார்க்க ஏற்பாடு செய்துட்டாப் போச்சு."

"இந்தப் பீடை வீட்டை விட்டு ஒழிஞ்சாதான் நான் நிம்மதியாத் தூங்க முடியும். நெருப்பும் பஞ்சும் போல உங்க ரெண்டு பேரையும் ஒரே இடத்திலே வச்சுக்கொண்டு...நான் படற கஷ்டம்."

"சண்பகம் ஒரு தடவை தவறு செய்துட்டேன்—ஒப்புக் கிறேன்—இனி நீ சொன்ன வார்த்தைக்கு நான் மறுவார்த்தை சொல்லமாட்டேன். இந்த வீட்டுக்கு அவ வந்த நாளா நான் அவ திக்குப் பக்கம் திரும்பிப் பார்க்கிறேனா..."

"பார்க்க நான் விட்டுவிடுவேனா? என் நிலையிலே இன்னொருத்தி இருந்தா, நீங்களுமாச்சு—இந்த வாழ்வு மாச்சுன்னு வெறுத்துட்டு வெளியே நடந்துடுவா. நாலு குழந்தைகளை நடு வீதியிலே விட்டுட்டு நான் எப்படிப் போவேன்? அந்தக் காரணத்துக்காக உங்களை மன்னிச்சிருக் கேன். ஆமாம் குழந்தைகளையுமா கூட்டிக்கிட்டுப் போறோம்?"

"எனக்குத் துணையா நீ வரே. ஹைதராபாத் பார்ட்டிக் குத் துணையா இருக்க மனோகரி."

"பேசாம அந்த பார்ட்டிகிட்டேயே இவளைத் தள்ளி விட்டுட்டா?"

"அவங்கள்ளாம் அப்போ கிடைக்கிற துணைகளை நாடறவங்க. மேலும் நான் காண்ட்டாக்ட் பண்ணப்போற

மனுஷன் பேரன் பேத்தி எடுத்த கிழவன். ஆனாலும் பெண் சபலம் எக்கச்சக்கம்.''

அது சமயம் பார்த்து ஒரு பூனை ஜன்னல் வழியே உள்ளே புகுந்து சாப்பாட்டறை மேஜைமேல் தாவி ஓரத்திலிருந்ததொரு டம்ளரை உருட்டிவிட, அது பொத்தென்று சத்தத்துடன் கீழே விழுந்தபொழுது இரவின் அந்த வேளையில் அது பலமாகக் கேட்கப் பதறிப் போனாள் சண்பகம்.

''அது என்ன சத்தம்?'' என்று கேட்டபடி அவள் எழுந்து விட்டாள். பரபரப்பாக நடந்து தன் அறைக்குள் சென்று படுக்கை மீது சரிந்து போர்வையை இழுத்து மூடிக்கொண்டு விட்டாள் மனோகரி.

''சனியன், ஜன்னல் கதவை மூடாது படுத்துக் கொண்டு விட்டிருக்கு. பூனை புகுந்து கலாட்டா செய்கிறது'' என்று திட்டிக் கொண்டு ஜன்னல் கதவுகளைப் பட்டென்று சாத்தி விளக்கை அணைத்துவிட்டு கணவனுடன் மாடிக்குப் போய் விட்டாள் சண்பகம்.

வெகுநேரம் மனோகரியின் இதயத்தின் படபடப்பு நிற்கவில்லை.

சண்பகம் அவளை அங்கிருந்து விரட்டியடிக்க முயலுகிறாள். யாரோ பம்பாய்க்காரியாமே, அவளிடம் தள்ளிவிடப் போகிறாள். பம்பாய்க்குப் போனால் இதைவிட நரகமான வாழ்க்கையல்லவா அவளுக்குக் கிடைக்கும்.

ஐயோ! என்ன செய்வாள் அவள்? கண்ணீர்விட்டு விம்மி அழுவதைத் தவிர அவளுக்கு வேறு ஒன்றும் புரியவில்லை.

அன்று காலை அவள் ஒரு தீர்மானத்துடன்தான் எழுந்திருந்தாள்.

யோகநாதன் தன் சட்டையைக் கழற்றி சாப்பாட்டறை நாற்காலி மீது போட்டுவிடுவது வழக்கம்.



அநேக நாட்களில் அவன் மணிபர்சைப் பைக்குள்ளே வைத்து மறந்து போய் மனைவியிடம் திட்டு வாங்கிக் கொள்வது வழக்கம்.

எல்லோருக்கும் முன் எழுந்து விட்ட மனோகரி பதை பதைப்புடன் சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்தாள்.

அவளது அதிர்ஷ்டம் உப்பிக் கொண்டிருந்த மணிபர்ஸ் கையில் அகப்பட்டது. சுற்று முற்றும் பார்த்து விட்டு அவசரமாகத் திறந்தாள். கத்தையாக அதில் பத்து ரூபாய் நோட்டுகள் பர்சின் ஒரு பகுதியில் காணப்பட்டன. சட்டென ஒரு நோட்டை இழுத்துக் கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டாள். பர்சை மூடி பைக்குள் வைத்துவிட்டு விளக்கை அணைத்து விட்டுப் பல் துலக்க குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு—பச்சைத் தண்ணீரில் குளித்து, கொடியில் காய்ந்து கொண்டிருந்த மாற்றுப் புடவையை இழுத்துக் கட்டிக் கொண்டு அவள் கதவைப் பூட்டிக்கொண்டு—கடைக்குக் கிளம்பினாள். இனி வாழ வேண்டிய அவசியமில்லை என்றதொரு கசப்பு உணர்வு நெஞ்சு முழுதும் நிறைந்திருக்க அவள் சோற்றையும் தயிரையும் வழித்துப் பின்னாலிருந்த குப்பைத் தொட்டியில் கொட்டிவிட்டு உள்ளே வந்தாள். சாகப் போகிறவளுக்குச் சோறு ஒரு கேடா என்று தன் மேலேயே வெறுப்பு. கடையிலிருந்து வாங்கி வந்த மூட்டைப் பூச்சி மருந்தினை எடுத்துத் தயாராக மேஜை மேல் வைத்துக் கொண்டாள்.

அது சமயம் வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது. திடுக்கிட்டுப் போனவள் சட்டென்று மருந்தை எடுத்து அலமாரிக்குள் ஒளித்து வைத்துவிட்டு வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

அலமேலு அம்மாள் கழுத்தில் வழிந்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு இடுப்பிலே வடகம் கொண்ட தகர டின்னுடன் நின்று கொண்டிருந்தாள்

"இப்பத்தானே முந்தாநேத்து எல்லாம் வாங்கினோம்—அதுக்குள்ளே மறுபடி எதுவும் தேவையில்லையே .." மனோகரி சோகமாகப் புன்னகைத்தாள்.

"நான் அப்பளம் விக்க வரலை. உன்னைப் பத்தி ஒரு இடத்திலே சொல்லி வச்சிருக்கேன். 'அவங்க தயவாலே உனக்கு இந்தச் சிறையிலிருந்து மீட்பு கிடைக்கும். அவசரப் பட்டுக்கொண்டு நீ ஏதாவது தவறான காரியம்பண்ணிடாதே. உன்னைப் பார்த்துட்டுப் போன நாளிலிருந்து எனக்குத் தூக்கம் கிடையாது. கயிற்றிலே நாந்துக்கலாம், விஷத்தை சாப்பிட்டுபிட்டு செத்துடலாம்னு கன்னாபின்னான்னு நினைக்காதே அம்மா. அப்படி ஏதாவது செய்துட்டியோ உங்கப்பா பேர் அம்பலமாகும்."

மனோகரி திகைத்துப் போனாள். அவள் மனதில் எண்ணித் துணிந்து முடிக்க இருந்த காரியத்தைத் தெரிந்து கொண்டவள் போலச் சரியான நேரத்திற்கு அலமேலு வந்து அழைப்பு மணியை அழுத்தியிருக்கிறாளே!

இன்னும் கொஞ்சம் தாமதமாக வந்திருந்தால் நிலமையே வேறாகி இருக்கும்.

"அவசரப்படாம இன்னும் நாலு நாள் பொறுத்துக்கோ. உனக்கு உதவி கிடைக்கும். எப்படி, ஏதுன்னு விவரம் கேட்காதே".. கூறிவிட்டு, "வரட்டுமா" என்றபடி திரும்பி கேட்டைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டாள்.

சண்பகத்திற்கு சதா சந்தேகம். தன் கணவன் அலுவலகத்தில் இருக்கிறான் என்பதை அடிக்கடி தொலை பேசி மூலம் தெரிந்து கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

உழைத்து ஓடாகினாலும் மனோகரி இளமையின் பொலிவோடு இன்னமும் அழகாக இருக்கிறாளே என்றதொரு கவலை. மனைவிக்கு துரோகம் செய்து விட்டு அவளை அழைத்துக் கொண்டு ஊருக்கு ஓடிய மனிதனை எப்படிப்



பூரணமாக நம்பமுடியும் என்ற வேதனை. அதனால் சதா எரிச்சலுடனும் சந்தேகத்துடனும் இருந்தாள்.

அன்று அலுவலகத்திற்கு கணவனைத் தொடர்பு கொள்ள தான் வேலை பார்த்த நிறுவனத்தினின்று தொலை பேசியில் தொடர்பு கொள்ள முயன்ற போது யோகநாதன் வெளியே போயிருக்கிறான் என்ற தகவல் கிடைத்தது. குப்பென்று அவளுக்கு வியர்த்துக் கொட்டி விட்டது. உடனடியாக மேல் அதிகாரியிடம் தனக்கு தாங்க முடியாத தலைவலி என்று சொல்லிவிட்டு லீவு எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டாள் ஆட்டோ ஒன்றில் வீட்டுக்கு.

அவள் பரபரப்பாக கேட்டை அணுகுவதற்கும் அலமேலு அம்மாள் தெருவில் இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

"இலை வடகம் தயார் செய்யப்போகிறேன். ஆர்டர் கொடுப்பீங்களான்னு கேட்க வந்தேன். உங்க வேலைக்காரி 'அதெல்லாம் அம்மாகிட்டே கேட்காத எதுவும் சொல்ல முடியாதுன்னு அனுப்பிட்டா" பற்களைக் காட்டினாள் அலமேலு.

வேகமாக அழைப்பு மணியை ஒலிக்க விட்டாள் ஆத்திரத்துடன் சண்பகம்.

மூட்டைப்பூச்சி மருந்தைக் குப்பைத் தொட்டியில் வீசி விட்டு—சமையலறைக்குள் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கியிருந்த மனோகரி ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

"ஏதாவது மறந்து வச்சுட்டுப் போயிட்டீங்களா?" மனோகரி கேட்டபோது அவளுக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது.

'உன்னை இங்கே வச்சுட்டுப் போயிருக்கேனே. அதுவே பெரிய தலைவலி...' என்று தனக்குள்ளே கூறிக்கொண்டாள்.

"கொஞ்சம் சூடா ஹார்லிக்ஸ் கலக்கிக்கொண்டு வா..." என்று அதட்டிவிட்டு சாமான் அறையைத் திறந்து விட்டாள்.

"ஆமாம் இங்கே யார் வந்தது?" என்று மனோகரியை மேலும் கீழும் சந்தேகத்துடன் உற்றுப் பார்த்தாள்.

"சித்த முன்னே அப்பளக்கார அம்மா வந்தாங்க."

"அவளுக்கு வேலையில்லை. கண்ட நேரத்திலே கண்டவ வந்தா கதவைத் திறக்கக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்லையா?"

"இனிமேலே திறக்கமாட்டேன். வந்தா வாசலிலேயே நிக்கவச்சு ஜன்னல் வழியாகப் பேசி அனுப்பிச்சிடறேன்."

"வேறே யாரும் வரலையே?"

"இல்லீங்க..." என்றாள் பயத்துடன் மனோகரி. அவள் குறிப்பிட்டது யார் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது.

காதல் என்று மயக்கித் தன்னைக் கடத்திக்கொண்டு வந்து, பின்னர் தன் மனைவி, பிள்ளைகளுக்கு வேலைக்காரியாக்கிக்கொண்டு கொடுமை செய்து கொண்டிருந்த யோகநாதனை அவள் இப்போது விஷமாக வெறுத்தாள்.

மனைவிக்குத் தெரியாது அவன் வீட்டுக்கு வந்து அவளிடம் சரசமாகப் பேச ஆரம்பித்தால்....அவன் மண்டையில் ஓங்கிக் கரண்டியில் அடித்துக் காயப்படுத்த அவள் தயாராக இருந்தாள்.

அன்று யோகநாதன் வீடு திரும்பியதுமே ஒரு பூகம்பம் உருவாகி விட்டது.

தானே கணவனுக்குக் காப்பியைக் கலந்துகொண்டு சென்று மேஜைமேல் வைத்த சண்பகம் கோபத்தின் உருவமாகிக் கொதித்துக் கொண்டிருந்தாள்.

"ஆபீசிலே நீங்க இல்லையே! எங்க போயிருந்தீங்களாம்?"

"மானேஜிங் டைரக்டர் வந்திருக்கார் இல்லையா? அந்த மனுஷனோட புதுக் கட்டிடத்தை விலைக்குப் பார்க்க நாங்க சிலபேர் கூடப் போயிருந்தோம். உடனே நான் திரும்பினதும் உனக்குப் போன் போட்டேன். தலைவலின்னு வீட்டுக்குப்



போயிட்டதாகத் தகவல் வந்தது. ஆமாம் இப்போ உனக்குத் தலைவலி எப்படி இருக்கு?"

பற்களைக் கடித்தாள். பெரிய பிள்ளை அலமாரியில் ஏதோ தேடிக்கொண்டு நிற்பதைப் பொருட்படுத்தாது கத்தினாள்.

"எனக்கு வந்திருக்கிற தலைவலி பம்பாய்க்காரியோட தான் முடியும் போலிருக்கு. என்னைக் கேட்டா நாம் ஹைதரா பாத்துக்குக் கூட்டிப் போகத் தேவையில்லை. அந்த பம்பாய்க் காரி வந்தா பிரச்னை தீர்ந்துரும். சீக்கிரம் அடுத்த வாரமே வராப்பல ஒரு தகவல் அனுப்பிடுங்க சொல்லிட்டேன்" என்றாள்.

"அப்படியே செய்துட்டா போச்சு. ஏன் கத்தறே?"

யோகநாதன் கெஞ்சுவது கேட்டது.

"யாருக்கும் என்னன்னு புரியப் போறதில்லை. நீங்க ஏன் அப்படி பட்டிக்காட்டு மாடு போல மருண்டு கொள்றீங்க? நாம இல்லாட்டாக்கூட அந்த பம்பாய்க்காரி வீட்டுக்கு வந்து நேரே சரக்கைப் பார்க்கலாம்னு ஒரு உற்சாகம் கொடுங்கோ. அப்பத்தான் காரியம் சட்டுனு முடியும்."

"சரி அப்படியே நாளைக்கே தகவல் அனுப்பிச்சுடறேன்." என்றான் யோகநாதன்.

இரவு சமையலுக்கு முட்டைகோசை அரிந்து கொண்டிருந்த மனோகரியின் கைவிரல்கள் நடுங்கின.

உள்ளே எட்டிப் பார்த்த சண்பகம் சத்தம் போட்டாள்

"மீன மேஷம் பார்த்துக்கொண்டு நிக்காதே. சமையல் சீக்கிரம் ஆகட்டும். நாளைக்கு நீ உன் பழைய புடவைகளைத் துவைச்சு கஞ்சி போட்டு இஸ்திரி செஞ்சு பெட்டியிலே அடுக்கி வச்சுக்கோ. ஒரு சமயம் நாம எல்லாரும் கோவாவுக்கு ஓய்வாப் போக வேண்டியிருக்கும். உன்னைத் தனியா வீட்டிலே எப்படி விட்டுட்டுப் போக முடியும்? இழுத்துக் கொண்டு போய்த் தொலைக்கணும். புரிகிறதா!" என்றாள்.

மனோகரி தலையை ஆட்டினாள். அவளுக்குத் தன் நிலைமை நன்றாகவே புரிந்து விட்டிருந்தது. என்ன செய்வது என்று மனம் அலைவில் உளைந்தது.

இரவு அவளுக்கு உறக்கமே வரவில்லை.

அலமேலு அம்மாளைத் தவிர அவளுக்கு வெளி உலகத் தொடர்பு ஏதும் இருக்கவில்லை.

மறுபடி வீட்டுக்குப் போன் செய்து, தன்னைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டால்?

மருந்துக் கடைக்காரர் போன் ஸ்டோர் ரூம் அருகே நடையில் இருந்தது.

காலை வேளை வியாபார மும்முரத்தில் அவள் பேசுவதை யாரும் கவனிக்க நேரம் இருக்காது.

மறுநாள் காலை எல்லோரும் வெளியேறியதும் அவள் நேரத்தை வீணாக்காது வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

அவளைக் கண்டதுமே மருந்துக் கடைக்காரர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

"நாலு நாழி கதை பேசிகிட்டு நிக்கக்கூடாது—சட்டு புட்டுனு மூணு நிமிசத்திலே பேசி முடிக்கிறதாயிருந்தா போன்கிட்டே போங்க. இல்லாட்டி வேறே இடம் பாத்துக்கோங்க."

மருந்து வாங்க வந்தவர்களில் இரண்டொருவர் தன் பக்கம் திரும்பிப் பார்த்தபோது அவமானத்தில் குன்றிப் போனாள்.

கல்லூரித் தோழிகளுடன் மணிக்கணக்காக டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த நாட்கள் ஞாபகத்துக்கு வந்தது.

அப்பாவின் பிரத்யேக டெலிபோனில் அவளுக்கு அத்தனை சலுகை இருந்தது...

இப்போது? வேதனையில் குமைந்தபடி வேகமாக விட்டு எண்களைச் சுழற்றினாள்.



அம்மா போனை எடுத்தாள்..."அம்மா நான்தான் மனோகரி" என்பதற்குள் அவள் குரல் துயரத்தில் தடைப்பட்டது.

"என்ன வேணும்...எங்கே இருக்கே..." ரகசியமாகக் கேட்டாள் அம்மா.

என்ன இருந்தாலும் பெற்றவள் இல்லையா?

தங்களது அருமைப்பெண் நடுத்தெருவில் அனாதையாக அலைகிறாளோ என்ற பயங்கர வேதனை அவளுக்கு.

"இங்கே நான் ஆபத்திலே சிக்கிட்டு இருக்கேன் அம்மா, யாரோ பம்பாய்க்காரியாம்—அவ வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போகப் போறாளாம். பயமா இருக்கும்மா, நான் ஒரு டாக்ஸி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வரவா...?"

"யாரோட பேசிக் கொண்டிருக்கே...." அப்பா இடை புகுந்து கேட்டு விட்டார்.

"நம்ப...மனோகரி பாவம்..." அம்மா உளறினாள் பயத்தில்.

"போனைக் கீழே வை. அவ செத்துப் போய் இரண்டு வருஷமாச்சு" அப்பா சலிக்க, அம்மா எதுவும் பேசாது போனை வைத்துவிட்டாள். ஒரு ரூபாய் நாணயத்தை கடைக்காரர் மேஜை மேல் வைத்துவிட்டு...ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

'அலமேலு அம்மாளை நம்பிக் கொண்டிருப்பதா... இல்லாவிட்டால் மறுபடி மூட்டைப்பூச்சி மருந்தை வாங்கி'... என்று எண்ணியபடி அழுதுகொண்டே அவள் துணிகளைத் துவைத்துக் காயப்போட்டுக் கொண்டிருந்தாள்.

வாயில் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

மறுபடி இன்றும் சண்பகம் திரும்பி வந்து விட்டாளா?

வீட்டுக்கு வந்தால் ஒரு நிமிஷம் நிற்க நேரமில்லாது வேலை கொடுத்து நெருக்கிப் பிழிந்து விடுவாளே பாவி.

ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்துக்கொண்டு அலங்கிக் கிடந்த முடியை விரல்களால் கோதிவிட்டுக் கொண்டு விரைந்தாள்.

'ஏன் இவ்வளவு நாழி? கதவைத் திறப்பதற்குள் என்ன தில்லுமுல்லு செய்து முடிச்சே?' காரமாகக் கேட்பாள் சண்பகம் என்று எண்ணியபடி வேகமாகக் கதவைத் திறந்தாள்.

வெளியே நின்று கொண்டிருந்த வயதான பெண்மணியைக் கண்டதும் மனதில் ஒரு கிலி ஏற்பட்டது.

பட்டையாக முன்னெற்றியில் கூந்தல் வெளுத்து, முகத்திலே சுருக்கங்கள் இங்குமங்கும் தென்பட்ட அந்தப் பெண்மணி அவளுக்குத் தெரிந்தவள் போல முறுவலித்துக் கொண்டு நின்றாள்.

"என்ன வேணும்?'' கவலையுடன் கேட்டாள் மனோகரி.

"இந்த வீட்டில் வந்து தங்கியிருக்கும் பெண்ணைப் பார்க்க வந்திருக்கேன். நீதான் அவள்னு நினைக்கிறேன். உன் பெயர்?'' கேட்டபடி கையிலிருந்த குடையை மடக்கித் தோள் பைக்குள் போட்டுக் கொண்டாள் அந்தம்மாள்.

'பார்த்தால் குடும்பப் பெண்மணி மாதிரி தெரியறாங்களே! எதுக்கும் கேட்டுப் பார்த்தால்' ...உள் மனம் உந்தவே மனோகரி மெல்லிய குரலில் கேட்டாள்.

"பம்பாயிலிருப்பவங்கதானே நீங்க?'' கேட்டு முடிக்கு முன் பயம் குரல் வளையைப் பிடித்துக் கொண்டது.

"ஒரு காலத்தில் பம்பாயில் இருந்தவள்தான்-இப்போ சென்னையில் தான் இருக்கேன். ஏன் கேட்கிறே?'' சாரதா மெலிதாகச் சிரித்தாள்.



நடுங்கிப் போய்விட்டாள் மனோகரி. 'பார்க்கக் குடும்பப் பெண் வேஷத்திலே அவளைக் கூட்டிக்கொண்டு சென்று தான் நடத்தும் தொழிலில் அழுத்தத்தான் முதலில் ஆளை எடைபோட வந்திருக்கிறாள். கொடுக்கும் பணத்திற்குத் தேறுமா என்று நோட்டம் பார்க்க வந்திருக்கிறாள் போலிருக்கு...' என்று எண்ணியதுமே அவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

திடீரென்று அவளையும் மீறித் தன் கைகளை எடுத்துக் கும்பிட்டாள்.

"அம்மா... நீங்களும் ஒரு பெண்தானே... கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. நான் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு. என்னை பம்பாய்க்குக் கூட்டிகிட்டுப்போகாதீங்க. யோகநாதன் கிட்டே சொல்லிடுங்கோ. நான்..." பேச முடியாது விம்மி அழுதாள்.

சட்டென்று உள்ளே நுழைந்து அந்தப் பெண்ணின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"பைத்தியக்காரி என் பெயர் சாரதா. அப்பளக்கார அலமேலு சொல்ல நான் வந்திருக்கேன். என் மேல் உனக்கு நம்பிக்கை ஏற்படா விட்டா நான் ஒரு காரியம் செய்யறேன், நாளை மறுநாள் காலை விவரம் சொல்லிட்டுப் போகச் சொல்றேன். நீ உன் சாமான்களை எடுத்துத் தயாரா மூட்டை கட்டிக் கொண்டு இரு. உன்னை என்னோடு கூட்டிக் கொண்டு போய்..."

"எனக்கு ரொம்பப் பயமா இருக்கும்மா. யாரை நம்பறது, யாரை—நம்பக்கூடாதன்னு தெரியலை."

"அப்போ இன்னொரு காரியம் செய்கிறேன். அலமேலு அம்மாளோடு கூட நான் வந்து அழைச்சா வருவியா? உன்னை இங்கேயிருந்து அழைச்சிட்டுப்போய்... உன் பெற்றோருடன் சேர்த்து வைக்க வேண்டியது என் பொறுப்பு. நான் எங்க பகுதி மாதர் சங்கத்து உறுப்பினர். இப்படி

எக்கச்சக்கமான ஆபத்துகளில் மாட்டிக் கொள்ளும் பெண்களைக் கவனித்து உடனடியா உதவுகிறது என் வேலை."

"அலமேலு அம்மாளை எனக்கு ரொம்ப நல்லா தெரியும்.... அவங்களோட நீங்க வந்தா...எனக்கு நம்பிக்கை ஏற்படும்."

"அப்படியே செய்கிறேன். நீ இன்னும் ஒரு நாள் பொறுத்துக் கொண்டிருக்கணும்... செய்வியா?"

"நாலுநாள் கூடப் பொறுத்துக் கிட்டிருப்பேன் அம்மா. என்னைக் காப்பாத்தினா உங்களுக்குக் கோடிப்புண்ணியம்."

"இங்கிருந்து பேசாம கதவைப் பூட்டிக்கிட்டு உன் வீட்டுக்குப் போக உனக்கு ஏன் துணிவில்லை?"

"போனில் பேசிப் பார்த்தேன். வீட்டிலே சேர்க்க மாட்டேங்கிறாங்க. வேறு எங்கே போறதன்னு தெரியலை. பெத்தவங்களே உள்ளே வரக் கூடாதுங்கிறப்போ காஞ்சிபுரத்திலே இருக்கிற பெரியப்பா மட்டும் அனுமதிப்பாரா... மேலும் வீட்டைவிட்டு வெளியே போக... கையில் காசில்லை. தனியா புறப்பட்டா இன்னும் வேறே யார் கையிலாவது சிக்கிக் கொண்டாள்னு பயமா இருக்கு. இந்த நாலு சுவரைத் தாண்டி... வெளியே தைரியமாப் புறப்பட நெஞ்சில் தெம்பு இல்லேம்மா... வீட்டைவிட்டுத் தெரியாம வெளி வந்ததுக்கு நான் நல்லாவே அனுபவிச்சுட்டேன்." படபடவென்று குலுங்கி அழுதாள்.

கிழிந்த ரவிக்கையும்—அழுக்காகி ஓரம் நைத்த பழைய நூல் சேலையிலும்... அந்தப்பெண் இன்னமும் பார்க்க லட்சணமாக இருப்பதை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டாள் சாரதா.

வீட்டிலே ஒழுங்காக இருந்திருந்தால்...இத்தனை நேரம் அவளுக்குப் பெரிய இடத்தில் அப்பா மாப்பிள்ளை பார்த்திருப்பார்.

21855



நகரத்தில் உள்ள பெரியதொரு கல்யாண மண்டபத்தில்... ஊரிலுள்ள அத்தனை பிரமுகர்களும் வந்து ஆசி கூறக் கல்யாணம் திமிலோகப்பட்டிருக்கும்.

உணர்ச்சி வசப்பபட்டு இப்படி ஒரு தவறான காரியம் செய்து விட்டதால் பாவம், வேலைக்காரியாக இந்த வீட்டில் மாடாக உழைக்கிறாள். இப்படியும் பெற்றவர்கள் பாராமுகமாக இருப்பார்களா? அநியாயம். எண்ணிக் கொதித்துப் போனாள் சாரதா.

"உன் பேர் என்னம்மா...உங்க அப்பா பேர் என்ன? விவரம் சொல்ல முடியுமா?"

"என் பேர் மனோகரி... அது மட்டும் சொல்றேன். என் அப்பா பெயரைச் சொல்ல மாட்டேன். அவருக்கு வீணா என்னால ஏற்பட்ட அவமானம்போதும். என்னை இங்கிருந்து மீட்டு நீங்க எங்கேயாவது ஒரு அனாதை ஆசிரமத்திலே சேர்த்துடுங்க. இங்கே உழைக்கிறதைப் போல ரெண்டு பங்கு உழைச்சு நான் ஆசிரமத்துக்குப் பெரும் உதவியா இருப்பேன். இல்லாட்டி உங்களுக்குத் தெரிஞ்சவங்க வீட்டிலே கொஞ்சம் தொலை தூரத்திலே என்னை வேலைக்காரியா அமர்த்திடுங்கோ. நாணயமா நாய் போல விசுவாசமாக இருப்பேன்." கண்கலங்கிப் போய்த் தடுமாறினாள்.

"சரி நீ பெயர் சொல்ல வேண்டாம்—நானும் இனி கேட்கமாட்டேன். நாளை மறுநாள் பகல்பொழுதுக்குள் நானும் அலமேலுவும் இங்கே வருவோம்—தயாராக இரு."

"இந்த வீட்டுக்கார அம்மா சொல்லாமக் கொள்ளாமப் போனதுக்குக் கோவிச்சுக்க மாட்டாங்களா?"

"சொல்லாமக் கொள்ளாம உன்னை உன் பிறந்த வீட்டிலிருந்து கடத்திக் கொண்டு போனாரே யோக்கியமான இந்த யோகநாதன், அப்போ யார் கோவிச்சுக் கொண்டா?

பிறந்த வீட்டிலிருந்து சொல்லிக்காமப் புறப்பட்ட உனக்கு இந்த வீட்டிலிருந்தும் சொல்லாம வெளியேற உரிமை இருக்கு. இப்பவே கையோட கூட்டிக்கொண்டு போயிடுவேன்—உனக்கு என் மேலே நம்பிக்கை இல்லை—உன்னை நான் நொந்துக்க மாட்டேன். உன் கசப்பான அனுபவம் உலகத்தை அப்படிப் பார்க்கச் செய்யறது."

"அம்மா, தயவு செய்து அலமேலு அம்மாளோட வாங்க—நான் தைரியமா புறப்பட்டுடறேன். அம்மா இந்த உதவி..."

"போறும் மனோகரி...சும்மா நீ கும்பிட வேண்டாம். இது எங்கள் கடமைன்னு கட்டாயம் செய்வேன். பயப் படாதே பல்லைக் கடிச்சுக் கொண்டு இரண்டு நாள் பொறுத்திரு..." என்றவள் சட்டென்று கேட்டாள்.

"இந்த வீட்டு ஆணும் பெண்ணும் வேலை பார்க்கிற கம்பெனி—என்ன உத்யோகம் இதையெல்லாம் சொல்ல முடியுமா?"

மனோகரி முகம் வெளிறிப் போனாள்.

"அம்மா, அங்கே போய் ஏதாவது விசாரிக்கப் போறீங்களா? என்னை இரண்டு பேரும் வெட்டிக் கொல்லைக் கிணற்றடியிலே புதைச்சுடுவாங்க. இல்லாட்டா என் முதுகிலே சூடு போட்டுடுவாங்க."

"அப்படியெல்லாம் செய்ய அவர்களுக்குத் துணிவு இருக்கும்னா சொல்றே?"

"அந்த சண்பகம் அம்மா பொல்லாதவங்க. இந்த வீட்டுக்கு என்னை யோகநாதன் கூட்டிக் கொண்டு வந்தன்னிக்குப் பெரிய சண்டை நடந்தது. பின்கட்டு அறையில் என்னைத் தள்ளி என் புருஷனுக்கு சொக்குப் பொடி போட்டு இழுத்துக் கொண்டு போனியா? நேத்து பிறந்த முளை நீ. எனக்குப் போட்டியாவா வந்திருக்கேன்னு' பழுக்கக் காய்ச்சின இரும்புக் கரண்டியாலே..." சொல்ல முடியாது திக்கிக்கொண்டு சட்டென்று திரும்பித் தன் முதுகுப் பக்கத்து ரவிக்கையை உயர்த்திக் காட்டினாள் மனோகரி.



அதிர்ந்து போனாள் சாரதா.

தாழம்பூ போன்ற நிறத்திலே தகதகத்த அந்த முதுகின் நடுவில் குறுக்காக தீப்புண் பட்டதொரு நீண்ட காயம்.

அடிப்பாவி. ஊரான் வீட்டுப் பெண்ணை எப்படி இம்சித்திருக்கிறாள். இவளைச் சும்மா விடக்கூடாது. ஆத்திரத்தில் பொங்கிப் போனாள். "அம்மா குழந்தே—உன் வயசுப் பெண்கள் சிலர் இன்னமும் காலேஜில் படித்துக் கொண்டு சந்தோஷமா பறவைகள் போலத் திரிஞ்சு கொண்டிருக்கும் போது உனக்கு இப்படிப் பல கசப்பான அனுபவங்களா? என் வயிறு கொதிக்கிறது. இப்பவே புறப்பட்டு வான்னு உன்னை இழுத்துச் செல்ல மனம் துடிக்கிறது. ஆனால் நான் அலமேலுவுடன் வந்து உன்னைக் கட்டாயம் கூட்டிக்கொண்டு போகிறேன்."

"எனக்கு இன்னொரு பயம்."

"என்ன? விளக்கமா சொல்லு."

"நான் கிளம்பற சமயம் சண்பகம் வீட்டுக்கு திடீர்னு வந்துட்டா?"

"நீ எதுக்கும் கவலைப்படாதே. என்னால் எல்லாத்தையும் சமாளிக்க முடியும். போலீசோட வந்து உன்னை அழைச்சுட்டுப் போகக் கூடிய துணிவு இருக்கு. நீ கேட்டுக் கொண்டபடி கலாட்டா எதுவுமில்லாம பக்குவமா உன்னை அழைச்கிட்டுப் போக விரும்பறேன். இந்தா, இது என் விசிட்டிங் கார்ட். பத்திரமா வச்சுக்கோ. இடையில் ஏதாவது ஆபத்து போலத் தென்பட்டா, எங்கிருந்தாவது என்னனை டெலிபோனில் கூப்பிடு. போலீசோட ஒரு நிமிஷத்திலே வந்திடுவேன்" என்றாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மனம் லேசாகிப் போனவளாக மனோகரி அந்த கார்டை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள். "இருங்க. இந்த வீட்டுக்காரங்க வேலை செய்கிற அலுவலகத்து முகவரிகளை எழுதிக் கொடுக்கிறேன்" என வேகமாக விரைந்து ஒரு கடிதத் துண்டுடன் வந்தாள்.

மேஜை மேல் அதை வைத்து நடுங்கும் கரத்தில் இருவரது அலுவலக முகவரி, தொலைபேசி எண்கள் எல்லாவற்றையும் தன் நினைவிலிருந்து எழுதிக் கொடுத்தாள்.

"நான் வரட்டுமா?" பிரிய மனமில்லாது சாரதா விடைபெற்றுக் கொண்டாள்.

## 3

வீட்டிற்குத் திரும்பியவுடன் அன்று மாலை சண்பகம் கோபத்துடன் சமையலறைப்பக்கம் வந்தாள்.

சுந்தரமூர்த்தி காலனியில் அவர்கள் வீடு மூன்றாவது. எதிர்வீட்டு வாசலில் சதா காவல் செய்து கொண்டிருந்த காக்கிச் சீருடைக்காரனிடம் சண்பகம் வலியப் பேச்சுக் கொடுப்பது வழக்கம். பொங்கலுக்கும்—தீபாவளிக்கும் அவனுக்கு இரண்டு ரூபாய்களைப் பரிசாக வழங்கிவிட்டு "எங்க வீட்டையும் கொஞ்சம் பார்த்துக்கோப்பா" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

சில நாட்களாக அவளுக்கு திடீரென்று ஒரு கவலை. அவள் நினைத்ததை முடிப்பதற்குள் ஏதாவது இடைஞ்சல் குறுக்கிட்டு விட்டால்? "வீட்டு வேலைக்காரி சின்னப் பொண்ணு. விபரம் தெரியாதவ. அதனாலே யார் வரா போறான்னு ஒரு கண் பார்த்துக்கோ" என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

அவள் வீடு திரும்பியதும் தெருவுக்குள் நுழைந்தவளைக் கை தட்டி அழைத்தான் எதிர் வீட்டுக் காவல்காரன்.



"யாரோ ஒரு பொம்பளை கொஞ்சம் தடிமனா இருந்தாங்க. கையிலே குடையோட நல்ல வெயில் வேளையிலே உங்க வீட்டுக்கு வந்துட்டுப் போனாங்க" என்று மூட்டிக் கொடுத்து விட்டிருந்தான்.

அந்தக் காலனி காவல்காரர்களிடையே அவன் ஒரு தமாஷ் பேர்வழி. இளவயதுக் கட்டை பிரம்மச்சாரி. காக்கிச் சீருடையில் சிக்கென்று இருந்தான். கோடிவீட்டு வேலைக்காரி குப்பம்மாளிலிருந்து அடுத்த வீட்டு சின்னப்பெண் அஞ்சலை வரை அவனிடம் நின்று இரண்டு வார்த்தை பேசாது போனதில்லை.

இந்த எதிர் வீட்டுக் குட்டி மட்டும் ஏதோ பெரிய இடத்துப் பெண் போலத் திமிராக அவனைப் பாராது போலப் போகிறாளே.

"எங்கே போறாப்பல, கடைக்கா?" என்று கேட்டால் கூடப் பதில் சொல்வதில்லை. ரொம்ப கர்வம் என்று உள்ளூர அவனுக்கு ஆத்திரம்.

வீட்டு வேலைக்காரப் பெண்ணையும் ஒரு கண் பார்த்துக்கச் சொல்லிவிட்டு சண்பகம் போகவே அவன் தனக்கு கேட்டருகே போட்டிருந்த ஸ்டூலை விட்டு நகரவில்லை.

காய்கறிக்காரன் வண்டியைத் தள்ளிக்கொண்டு வாசலில் வந்து கத்திவிட்டுப் போனதிலிருந்து—தபால்காரன்—சாத்துக்குடி விற்கிறவன் என்று அவர்கள் வீட்டு வாசலைத் தொட்டவர்களையெல்லாம் கண்காணித்துக் கொண்டிருந்தான்.

தன் வாழ்க்கையில் முள்ளாக உறுத்திக் கொண்டிருந்த மனோகரியை ஒழித்துக் கட்டிவிட்டுக் கிடைக்கப்போகும் கணிசமான தொகையில் ஒரு தங்கச் சங்கிலி செய்து போட்டுக் கொள்ளத் திட்டமிட்டிருந்தாள்.

எதிர் வீட்டு காக்கிச்சட்டை சொன்ன தகவலைக் கேட்டதும் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

எவளோ ஒருத்தி அவர்களது வீட்டுக்குள் புகுந்து நின்று நிதானமாகப் பேசிவிட்டுப் போனாளாமே! யார் அவள்?

"யாரோ நானில்லாதபோது இங்கே வந்தாளாமே, யார் அது?" சமையலறைப் பக்கம் தலையை நீட்டி அதட்டினாள்.

"யாரும் உங்களைத் தேடிக்கொண்டு வரலையே" குழறினாள் மனோகரி. சண்பகத்துக்கு உண்மை தெரிந்து விட்டதே என்று உடல் வெதறிப் போனாள்.

"பின்னே உன்னைத் தேடிக்கொண்டா வந்தா? உண்மையைச் சொல், எதிர்வீட்டுக் காவல்காரன் பார்த்திருக்கான்."

அவளது நடவடிக்கைகளைக் கண்காணிக்க சண்பகம் இப்படி ஒரு ஆசாமியை ஏவி விட்டிருக்கிறாளா? திக்கென்ற உணர்வில் அவள் ஆடிப்போனாள். இரண்டு நாள் கழித்து அலமேலுவும்—அந்தம்மாளும் வரப் போறாங்களே! காவல்காரன் சொல்லி விட்டால்?

"என்ன முழிக்கிறே—கேட்டதுக்குப் பதில்" அதட்டினாள் சண்பகம்.

"தபால்காரர் வந்தார். கீரைக்காரம்மா வந்தாங்க. தபால்களை வாங்கி மேஜை மேல் வச்சிருக்கேன். கீரை தேவையில்லைனு அனுப்பிச்சுட்டேன். ஓ! அதுவா, ஒரு அம்மா, அவங்களை நமக்குத் தெரியாது. என்னவோ டொனேஷன் டிக்கட்டுகளை உங்களைப் பார்த்து வித்துட்டுப் போகலாம்னு வந்தாங்களாம். நல்ல வெய்யிலா? தண்ணி கொடு தாகமா இருக்குன்னாங்க."

"பிரிட்ஜிலிருந்து காய்ச்சி வச்ச தண்ணியை வந்தவ வழியோட்டிக்கெல்லாம் தாராளமா எடுத்துக் கொடுத்தியாக்கும்?" சீறினாள் சண்பகம்.

"இல்லே. அண்டாவிலே பிடிச்சு வச்சிருக்கிற தண்ணியை மொண்டுதான் கொடுத்தேன்."



"தண்ணி கொடுன்னு கேட்டுக்கிட்டு உள்ளே வந்து உன் மென்னியைப் பிடிச்சுட்டு விட்டிலுள்ளதையெல்லாம் திருடிக் கொண்டு போற கொள்ளைக்காரியா இருந்தா?"

"பாவம் வயசானவங்க. பார்த்தா அப்படித் தோணலை."

"உன்னைக்கூட பாவம் சின்னப்பெண்ணுன்னுதான் பார்க்கிறவங்க இரக்கப்படுவாங்க. நீ செய்திருக்கிற அக்கிரமம்."

"இனிமே ஜாக்கிரதையா இருக்கேன்—யாரையும் உள்ளே விடமாட்டேன்."

"ஜாக்கிரதையா இருந்து தொலை. இல்லாட்டா?" தாடை இறுக மாடிப்பக்கம் சென்றுவிட்டாள்.

நாளை மறுநாள் அலமேலுவுடன் சாரதா அம்மா வந்தால் எப்படி வெளியே புறப்பட முடியும்?

ஏதாவது தடங்கல் ஏற்பட்டால், அவளுக்கு அதற்குப்பின் விடிவுகாலமே இருக்காதே.

கணவனும் மனைவியும் கல்நெஞ்சத்துடன் அவளை பம்பாய்க்குப் பார்சல் செய்து விடுவார்களே.

அதற்குப் பின்னர் வீடு திரும்பியவர்கள் மிக குறைவு என்று ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த நினைவு அவள் முதுகில் சில்லென்று உறைத்தது.

## 4

சாரதாவுக்குத் தன் ஞாபகசக்தி மீது என்றுமே நம்பிக்கை கிடையாது.

சிநேகிதிகளின் கார், டெலிபோன் எண்களிலிருந்து முகவரி எல்லாவற்றையும் டைரியில் அந்தந்தப் பகுதியில் குறித்து வைத்திருப்பது வழக்கம்.

வீடுகூட்டும் மருதாயியின் முகவரிகூட அவளது டைரியில் இடம் பெற்றிருந்தது.

வீட்டுக்குப் போனதும் முதல்வேலையாகத் தன் டைரியை எடுத்து ‘அ’ எனும் பகுதியை ஆராய்ந்தாள்.

அலமேலுவின் முகவரி, பளிச்சென்று கண்களில் பட்டது. எப்பொழுதாவது தோழிகளுக்கு அப்பளம் தேவைப்பட்டால் அவர்களுக்கு எடுத்துப் போகும்படி சுருக்கமாக அலமேலுவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விடுவாள்.

நாளைக்கு என்று அவள் எதையும் ஒத்திப் போடுவதேயில்லை. அதன் பயனாக அடுத்த நாளே தோழிக்குத் தேவைப்பட்ட அப்பளம் கிடைத்து விடும்.

டைரியையும் மேஜை இழுப்பறையிலிருந்தொரு தபால் கார்டையும் எடுத்துக் கொண்டாள். பிரிட்ஜிலிருந்த பாட்டில் குளிர்ந்த நீரை ஒரு டம்ளரில் ஊற்றிக் கொண்டு மடமடவென்று குடித்துவிட்டுக் கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

சுருக்கமாக அலமேலுவுக்குப் புரியும் வகையில் எழுதினாள். “நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். அவசரமாக ஒரு ஐம்பது உளுந்து அப்பளத்துடன் புதன்கிழமை காலை வீட்டுக்கு வரவும். தாமதம் செய்யக்கூடாது. அப்பளம் அவசரமாகத் தேவை. சாரதா” என்று நான்கு வரிகள் எழுதி விலாசத்தை எழுதி முடித்துக் கையில் எடுத்துக் கொண்டு வெய்யிலைப் பொருட்படுத்தாது அருகிலிருந்த தபாலாபிசிற்குச் சென்று தன் கையாலேயே அன்றையத் தபாலில் சேர்த்து விட்டுத் திரும்பினாள்.

அந்த அபலைப் பெண்ணின் முகம் அவளது நினைவில் அன்று பூராவும் நிழலாடிக் கொண்டிருந்தது.

இரவு படுக்கப் போகுமுன் அவள் இன்ஸ்பெக்டர் ரங்கனுக்குப் போன் செய்தாள்.

அப்பொழுதுதான் அவன் தன் பணியிலிருந்து வீடு திரும்பியிருந்தான். “என்னம்மா...காலையில் நான் காவல் நிலையத்துக்குப் போகுமுன் உங்க ஃபிளாட்டுக்கு வந்துட்டுப் போகணுமா? இது என்ன கேஸ்? மாமியார் மருமகள்



சண்டையா? கொலை முயற்சியா? தற்கொலை முயற்சியா? இப்போ இந்த வேளையில் நீங்க யாருடைய பிரச்னையில் போய் சிக்கிக் கொண்டிருக்கீங்க?” சிரித்தான் ரங்கன்.

“ரங்கா இது சிரிக்கிற சங்கதியல்ல. ரொம்ப சீரியஸான சங்கதி. பெண்ணின் பிரச்னைதான். சாதாரணமாக எங்களுக்குத்தானே அவதிகள் அதிகம். அதைப் பற்றி நான் கவலைப் படுகிறதில் தப்பு இல்லையே!”

“சாரதா அம்மா, நான் குறுக்கே பேச மாட்டேன். காரணமில்லாமல் நீங்க கூப்பிட மாட்டீங்க. வரேன் கட்டாயம்” என்றான்.

மறுநாள் காலை... சொன்னபடியே ரங்கன் காலையில் காவல் நிலையத்திற்குப் போகுமுன் அவளது ஃபிளாட்டு வாயில் அழைப்பு மணியை அழுத்தினான்.

அவசரமாகக் கதவைத் திறந்தாள் சாரதா. அவனை முன்னறையில் அமர்த்தி, மனோகரியின் கதை முழுவதையும் சொன்னாள்.

“அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் யார் என்ற விவரம் கட்டாயம் தேவை. அப்பொழுதுதானே நாம் விசாரணை செய்ய முடியும்” என்றான்.

“இதை போலீஸ் அளவிலே கொண்டு செல்லாது சமூக சேவகி என்ற நிலையில் நான் என்ன செய்ய முடியும்? அந்த வீட்டிலிருந்து அவளை வெளிக் கொணர்ந்து விட்டால் குற்றமாகுமா?”

“எப்படிக் குற்றமாகும்? அவள் அங்கே வேலைக்காரி என்ற நிலையில் இருக்கிறாள். வேலை செய்யப் பிரியமில்லாது வெளிநடப்பு செய்ய உரிமை இருக்கிறதே. மேலும் மேஜராகி விட்ட பெண். அவள் வாழ்க்கையை அவள் இஷ்டப்படி அமைத்துக் கொள்ள உரிமை உண்டு. பெற்றோருக்கே தலையிடத் தகுதி இருக்காதே.”

"அந்த யோகநாதன் வம்புக்காரனாக இருந்து சண்டைக்கு வந்தால்...."

"ஒரு காரியம் செய்யுங்கோ. அந்தப் பெண்ணை நீங்கள் உங்க வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருமுன், அவள் கைப் பட ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு வரச் செய்யுங்கோ. எனக்கு உங்க வீட்டு வேலை பிடிக்கவில்லை. என்னை நாள் பூரா பட்டினி போடுவதால் தொடர்ந்து வேலை செய்யப் புறப்பட்டுவிட்டேன். எனது சம்பளப் பாக்கியை இந்த முகவரிக்கு அனுப்பி விடுங்கள்...என்று எழுதிக் கையெழுத் திட்டு மேஜை மேல் வைத்துவிட்டு வந்து விடுங்கள்—பிறகு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்." ஆலோசனை சொன்னான்.

கொஞ்ச நேரம் தன் வீட்டுச் செய்திகளைப் பேசிக் கொண்டிருந்துவிட்டு நேரத்துடன் தன் அலுவலகத்தில் இருக்க வேண்டி சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

கதவை மூடிவிட்டு உள்ளே வந்து உட்கார்ந்தபோதுதான் அவளுக்கு மூளையில் அந்த யோசனை பளிச்சிட்டது.

இப்போது அந்தக் கட்டிடத்திலிருந்த அனைவரும் அவளுக்கு மிகவும் நெருக்கமான சிநேகிதர்களாகி விட்டிருந் தனர். மாமியாரால் கொடுமை செய்யப்பட்ட மல்லிகாவை மீட்கும் பணியில் அவளுக்கு இரண்டாவது தளத்திலிருந்த நீலகண்டனும், பசுபதியும் மிகவும் உதவினார்கள்.

நீலகண்டன் தன் சகோதரனைப் பார்க்கப் பங்களூருக்குப் போய் விட்டிருந்தார். அவருக்கு அடுத்த பிளாட்டில் தங்கி யிருந்த பசுபதி, வயதானவர். மகன் குடும்பத்துடன் வசிக்கும் ஒரு வக்கீல். அவர் இப்போது தொழில் செய்யாது ஓய்வாய் இருக்கிறார் என்றாலும் அவரது ஆலோசனைகள் கை கொடுக்குமே. பிளாஸ்டிக் கூடையுடன் கோவிலுக்குக் கிளம்பு வது போல கதவைப் பூட்டிக் கொண்டு ஆயத்தமானாள். இரண்டாவது தளத்து மாடிப்படிகளை மூச்சிறைக்க ஏறி பசுபதி வீட்டு வாசல் அழைப்பு மணியை அழுத்தினாள்.



பசுபதியே வந்து கதவைத் திறந்தார்.

"சாவியை இங்கே வச்சுட்டுப் போறேன். சிலசமயம் நான் ஞாபக மறதியா கடை கண்ணியில் சாவியை விட்டுட்டு வந்து திண்டாடறேன். அதனாலே..."

"என்னம்மா நல்ல வெய்யிலில் கோயிலுக்குக் கிளம் பிட்டீங்க?"

"கடவுளை தரிசிக்க, வெய்யில் மழைன்னு பார்க்க முடியுமா? நான் திரும்பி வந்து சாவியை எடுத்துக்கொண்டு போகும்போது பத்து நிமிஷம் எங்க ஃபிளாட்டுக்கு நீங்க வர முடியுமா?"

"பேஷா வரேன். ஏதாவது பிரச்னையா? உங்களுக்கு என் ஆலோசனை தேவையா?"

"ஒரு பெண்ணுக்குப் பெரிய பிரச்னை ஏற்பட்டிருக்கு. அவளுக்கு உதவ உங்களது சட்ட ஆலோசனையும் உதவியாக இருக்கும்."

அருகிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போய்விட்டு, விரித்த குடை வழியே வெய்யில் நெருப்பாகத் தலையைச் சுட மூச்சிறைக்க, மெல்லத் திரும்பிய சாரதா, பசுபதியின் ஃபிளாட் அழைப்பு மணியை ஒலிக்க விட்டாள்.

பசுபதி தயாராகக் காத்திருந்தார்.

கதவைத் திறந்து அவரை முன்னறையில் உட்கார வைத்தாள். இரண்டு டம்ளர்களில் ஐஸ்மோருடன் முன்னறை யில் வந்து அமர்ந்து கொண்டு விவரமாக நடந்தவற்றை யெல்லாம் சொன்னாள்.

"அம்மா, இதில் சட்டத்தின் சிக்கல்கள் ஏதும் இல்லை. அந்தப் பெண்ணை நீங்கள் தாராளமாக அழைத்து வர முடியும். சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளி யேறிய மனோகரி மீது திருட்டுக் குற்றம் சாட்டி, தங்களது உடமைகள் சில காணவில்லை என்று புகார் செய்ய முடியும்.

ஆனால் அங்கே விஷயம் திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் இருக்கிறது. அவர்கள் தானே தேன் கூட்டைச் சீண்ட மாட்டார்கள். ஏதாவது உதவி வேண்டுமானால் உடனடியாக நீங்கள் போனில் என்னைக் கூப்பிடுங்கள். இரண்டு நொடியில் வந்துவிடுவேன்'' சொல்லிவிட்டு, கொஞ்ச நேரம் நாட்டு நடப்பை அலசிக் கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுக் கொண்டு வெளியேறி விட்டார்.

அலமேலு அம்மாளுக்குக் கடிதம் கிட்டவேண்டும் அவள் உடனே வரவேண்டுமே...என்று பலவும் சிந்தித்து அந்தநாள் ஓடும் பரபரப்பில் கழித்துக் கொண்டிருந்தாள் சாரதா.

## 5

அன்று இரவு சண்பகம் முன்னறையில் டி.வியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் மனதிலே பலவிதமான கவலைகள் உருவாகியிருந்தன.

இதே ஊரில்தான் மனோகரியின் பெற்றோர்கள் வசிக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

கௌரவத்தை உத்தேசித்து அவர்கள் ஓடிப்போன மகளை ஒரேயடியாக உதறிவிட்டிருந்தனர்.

அவளை அழைத்துச் சென்றவள் இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டு குடித்தனம் செய்து கொண்டிருக்கிறான் என்று நம்பினார்கள் போலும். இல்லாவிட்டால்...தங்களது செல்லப் பெண் வேலைக்காரியாக சீரழிந்து போயிருப்பது தெரிந்தால் சும்மாயிருப்பார்களா? என்னதான் கோபம் என்றாலும்... தங்கள் மகள் மிகவும் அடிமட்ட நிலையில் தள்ளப்பட்டிருக்கிறதைக் கேள்விப்பட்டால் மிகவும் ஆத்திரப்பட்டு ஏதாவது முடிவு எடுக்க மாட்டார்களா...

தொடர்ந்து மனோகரியை வீட்டில் வைத்திருப்பதில் பல பிரச்னைகள்.



திடீரென்று யோகநாதன் திருப்பிக்கொண்டு...அவளை மனைவியாக நடத்த விரும்பறேன்-உனக்கு இஷ்டமில்லாவிட்டால் கிளம்பு என்று சொல்லிவிட்டால்?

பாம்பு என்று நம்பித் தாண்ட முடியாது—பழுது என்று மிதிக்க முடியாது. அப்படிப்பட்டதொரு மனநிலை கொண்டவன் அவள் கணவன். சாது போல அடக்கமாக இருப்பவர்கள் மிரண்டு கொண்டு எழுந்தால் அடக்கவே முடியாதே...

ஒரு சமயம் இந்தப் பெண் தானே வேறு எங்கேயாவது ஓடி விட்டால்... ஓடினால்... ஒரு பெரும் தலைவலி ஒழியும். ஆனால் அதைவிட அவளை அந்த பம்பாய்க்காரிக்கு விற்று விட்டால்...

அந்த சமுத்திரத்தில் போய் சிக்கிக் கொண்டால் மீண்டு வெளியில் வருவதற்குள் மனோகரி பற்கள் போன கிழவியாகி விடுவாள்—அதற்குப் பின் பிரச்னை ஏது?

மேலும் அவர்கள் அவளை பம்பாய்க்காரியுடன் அனுப்பி விட்டதற்கு என்ன ஆதாரம்?

யாரோ ஒரு பெண் வாசலில் வந்து நின்று வேலை கேட்டாள்.

சின்ன வயசு என்று முதலில் தயங்கினேன். வேலைக்காரி பிரச்னை நெஞ்சை இறுக்கிக் கொண்டிருந்த சமயம். இரண்டு பேரும் வேலைக்குப் போகும் குடும்பம். முன்பின் தெரியாதவள். தைரியமாக வேலைக்கு வைத்துக் கொண்டேன்-ரெண்டு வருஷம் நல்லவளாக ஒழுங்காக இருந்தாள். யார் கண்டது?

கடைக்குப் போகுமிடத்தில் எவனுடன் சிநேகிதத்தை ஆரம்பித்துக் கொண்டாளோ... ஒரு நாள் சாயங்காலம் வந்து பார்க்கும் போது வீட்டை விட்டு ஓடி விட்டிருக்கிறாள்.

இந்தக் கதையை.... எல்லோரிடமும் சொல்லிச் சங்கடங்கள் எதிலும் மாட்டிக் கொள்ளாது தப்பிக் கொள்ளலாம்.

ஆம்!.... மனோகரியின் நகைகள் இருக்கின்றனவே? வங்கி லாக்கரிலிருந்து அவைகளை எடுத்து வந்து...குடும்பத்துக்குத்

தெரிந்த நகை வியாபாரியிடம் கொடுத்து அழித்து மாற்றி வேறு திணுசில் எதையாவது செய்து கொள்ள வேண்டியது முக்கியம்.

அந்த வைர அட்டிகையும்....பச்சைக்கல் மோதிரமும் அவர்களை ஒரு சமயம் காட்டிக் கொடுத்து விட்டால்? பெரிய வம்பாகி விடும்.

டி.வி.யை படக்கென்று அணைத்தாள். காலை ஒரு முக்காலி மீது நீட்டியபடி சோபாவில் சாய்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்த கணவனின் தோளை பட்டென்று தட்டினாள்.

"என்ன என்ன?" என்று பதறிக்கொண்டு யோகநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"குழந்தைகள் மாடிக்குப் போயிட்டாங்களா... இந்த சனியன் அடுப்பங்கரை வேலைகளை முடிச்சுட்டு...படுக்கப் போய் தொலைஞ்சுட்டாளா?"

"எனக்கென்ன தெரியும்?"

"சமையலறையில் சத்தமில்லை. சனியன் அவசரமா வேலையை முடிச்சுட்டுப் படுக்கப் போயிருக்கும். எப்பவும் தூக்கம் தானே அவளுக்குப் பெரிய வேலை..."

ஆனால் அது சமயம் அந்தச் சனியன் பதைபதைக்கும் நெஞ்சோடு சுவர் ஓரமாக வந்து அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது இருவருக்கும் தெரிய நியாய மில்லை.

சாரதா என்ற அம்மாள் அலமேலுவுடன் வந்து தனக்கு உதவப் போவதாக வாக்குத் தந்திருக்கிறாளே.

அவர்கள் வந்து அவளை மீட்கு முன் ஏதாவது சங்கடம் ஏற்பட்டு விடக்கூடாது. கணவனும் மனைவியும் ஒரு சமயம் அவளை மறுநாள் காலையிலேயே பம்பாய்க்காரியிடம் ஒப்படைக்கத் திட்டமிடுகிறார்களோ? தாங்க முடியாத கவலையில் அவள் ஒட்டுக் கேட்க மெல்ல முன்னறை அருகில் ஓசைப்படாது வந்து நின்று கொண்டிருந்தாள்.



"மனோகரி நேத்திலிருந்து ஒருமாதிரி நடந்து கொள்றா— எனக்கு ரொம்ப சந்தேகமா இருக்கு. நமக்குத் தெரியாம யாரோடயாவது ஓடி விட்டா?"

"தொலைகிறது பீடை."

"சொல்ல மாட்டீங்களா? இந்தப் பீடையைக் கொண்டு வந்து வீட்டில் சேர்த்து என் வாழ்க்கையை வேதனையாக் கிட்டுப் பேச மாட்டீங்க இப்போ?" உறுமினாள் சண்பகம்.

"கவலையாயிருந்தா ஒரு வாரம் லீவு போட்டுட்டு வீட்டோட இரு."

திக்திக்கென்று மனோகரியின் நெஞ்சு அடித்துக் கொண்டது.

சண்பகம் வீட்டோட தங்கி விட்டால் அந்த சங்கதியை எப்படி சாரதாவுக்குச் சொல்ல முடியும்?

"இந்த வாரம் எனக்கு லீவு கிடைக்காது. ஆபீசிலே ஏகப் பட்ட வேலை. என்னோட சிநேகிதி ருக்மணியைக் கெஞ்சி என் வேலை பளுவைத் தள்ளிவிட்டா நான் வெள்ளிக்கிழமை யன்னியிலிருந்து லீவு எடுத்துக்கலாம். நீங்க மத்த காரியத்திலே சுறுசுறுப்பா இருங்கோ."

"ஏற்கனவே நான் அந்த பம்பாய் பார்ட்டிக்குத் தகவல் அனுப்பிட்டேன். இந்த ஞாயிற்றுக்கிழமை அவங்க நேரே வரதாகச் சொல்லியனுப்பியிருக்காங்க. இதெல்லாம் வாய் மூலம் வரும் தகவல். கடிதாசியிலே எழுதி அகப்பட்டுக்க முடியுமா?"

"என்ன செய்வீங்களோ தெரியாது. இந்த வாரக் கடைசி யோட இந்தப் பீடையைத் தலை முழுகிட்டு நான் நிம்மதியா இருக்கணும்."

"பாவம் வேலைக்குத்தான் வேறே ஆள் கிடைக்காம திண்டாடுவே."

"இந்தப் பெண்ணையும் உங்களையும் பத்திக் கவலை பட்டுச் சாகறதைவிட சமைத்துப் போட்டு செத்துப் போறது மேல்னு முடிவுக்கு வந்துட்டேன். நம்ம வீட்டுக்கு இனி ஒரு கிழவியைத் தேடி வேலைக்கு வைக்கப் போறேன்.

"எதிர் வீட்டுக் காவல்காரனிலிருந்து இவ மேலே எத்தனை பேருக்குக் கண் தெரியுமா? நான் தினமும் அடி வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டே சாகறேன். இவளுடைய அம்மாவுக்கு இல்லாத வீண் கவலை எனக்கு" சற்று உரத்த குரலில் அதட்டிவிட்டு, "எழுந்திருங்கோ, தூங்கி வழியாதீங்கோ" என அதட்டினாள்.

சட்டென்று தன் அறைக்குள் சென்று மறைந்து கொண்டாள் மனோகரி. அவளால் இப்போது நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

மறுநாள் புதன்கிழமை மாலைக்குள் சாரதா அம்மா வரா விட்டால் போன் செய்து அழைக்க வேண்டும். இல்லா விட்டால் துணிவாகக் கிளம்பி, தானே அவள் கொடுத்த விலாசத்திற்குப் போய் கதவைத் தட்டிக் காலில் விழ வேண்டும். தீர்மானித்தவளாய் தூங்கிப் போனாள்.

## 6

வெறும் காப்பியை மட்டும் குடித்துவிட்டு சாப்பாட்டறை ஜன்னல் அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் சாரதா.

மனோகரியை மீட்டு அவளுக்கு மறு வாழ்வு அமைத்துக் கொடுக்கும் வரை அவளுக்குப் பசி—தூக்கம் ஏதும் இருக்காது போன்றதொரு பரபரப்பு மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

பஸ் நிலையத்தில் நின்று மறைத்துக் கொண்டிருந்த தொரு பல்லவன் நகர்ந்ததும் அலமேலு அம்மாள் தகர



டின்னைச் சுமந்தபடி எதிர் பக்கத்துத் தெருவைத் தாண்ட வந்து நிற்பதைக் கண்டாள்.

அவள் மார்பு மகிழ்ச்சியில் படபடத்தது.

அலமேலு சாலையைக் கடந்து தெருவுக்குள் புகுந்து அந்தக் கட்டிடத்திற்குள் வந்து மாடிப்படிகளைத் தாண்டி அவள் ஃபிளாட்டு வாசலுக்கு வருவதற்குள் அவளால் தாங்க முடியாது போன்ற ஆவல். கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தயாராக நின்றாள்.

"நீங்க கேட்டபடி உளுந்து அப்பளம்" என்று கூறிக் கொண்டு உள்ளே நுழைந்த அலமேலு இடுப்பிலிருந்த தகர டின்னை மேஜை மேல் ஒரு புறம் வைத்தாள்.

"அப்பளம் இருக்கட்டும். வேறு ஏதாவது கொண்டு வந்திருந்தாலும் அத்தனையையும் நானே வாங்கிக்கிறேன். இப்போ நீங்க என்னோட காபி டிபன் சாப்பிடப் போறீங்க. உடனே நாம் ஒரு டாக்ஸியிலே கிளம்பிப் போய் அந்த மனோகரியை வீட்டுக்கு அழைச்சுக் கொண்டு வருவோம்."

"ஐயோ! அது எப்படி முடியும்?"

"முடிகிற சங்கதியானதால்தான் நான் இதிலே தலையிட்டுக் கொண்டிருக்கிறேன். பேசாமல் கூட வாங்கோ. உங்களைப் பார்த்துத்தான் அவ என்னை நம்பிப் புறப்பட்டு வருவா."

"அந்த மனுஷன் ஏதாவது..." அலமேலு முடிக்கவில்லை.

"அந்த அயோக்கியன் யார்? அவனுக்கும் மனோகரிக்கும் உறவு என்ன வச்சிருக்கு?" கோபத்துடன் அதட்டினாள்.

காலை பத்து மணியளவில் வாசலில் வந்து நின்ற டாக்ஸியை எதிர் வீட்டுக் காவலாளி ஆச்சரியமாகக் கவனித்தான்.

வயதான பெண்கள் இருவர் 'டாக்ஸியினின்று இறங்கி உள்ளே செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

சண்பகம் அம்மாள் வந்ததும் டீ சாப்பிட ஒரு ரூபாய் கிடைக்கும். இந்த முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டும் என்று அவன் யோசித்துக் கொண்டு நின்ற போது அந்த வீட்டு யஜமானி அவனை உள்ளே கூப்பிட்டாள்,

'சமயம் பார்த்து கழுத்தறுக்கிறாங்க' எனக் கடுத்துக் கொண்டு அவன் உள்ளே போய்விட்டாள். திரும்பியபொழுது வாசலில் நின்ற டாக்ஸியைக் காணவில்லை. வெகுநேரம் வீட்டையே வெறித்துக் கொண்டிருந்தான்.

டாக்ஸியை அனுப்பிவிட்டு அந்த இரு பெண்களும் உள்ளே போயிருக்கிறார்களோ? கழுத்துதான் வலித்தது. இந்த பக்கமும் அந்தப் பக்கமுமாகத் திரும்பி அலுத்துப் போனான்—டாக்சியுடன் அந்த இரு வயதான பெண்களும் மாயமாகிப் போய் விட்டிருந்தனர்.

## 7

குளித்து விட்டு சாரதா கொடுத்து உதவிய வாயில் சேலையை உடுத்திக் கொண்டு தலையை வாரிக் கொண்டையிட்டுக்கொண்டு, பளிச்சென்ற குங்குமப் பொட்டோடு முன்னறைக்குள் வந்து நின்ற மனோகரி முற்றிலும் மாறியவளாகத் தெரிந்தாள்.

கலக்கமும், பீதியும் தெரிந்த அந்தக் கண்களில் நம்பிக்கை ஒளியிட்டது. பார்க்கப் பளிச்சென்று அழகாகவே இருந்தாள்.

இது நாள்வரை ஒரு குப்பை மேட்டுக்குள் கிடந்த மாணிக்கமாக இருந்தவளை மீட்டுக் கொண்டு வந்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள் சாரதா.

"நாலுநாள் இந்த அம்மா வீட்டிலே நன்னா சாப்பிட்டு ஓய்வாக இருந்தா நீ முன்னிருந்த மனோகரியா மாறிடுவே. இந்த அம்மா பல பெண்களுக்கு உதவி செய்திருக்காங்க.



உனக்கு மேற்கொண்டு என்ன செய்கிறதுன்னு யோசிச்சு உதவி செய்வாங்க. பத்திரமான இடத்திலே வந்து சேர்ந்திருக்கே. இனி கவலையில்லை" படபடவென்று உணர்ச்சி வசத்தில் பேசினாள் அலமேலு.

அவள் கண்களில் நீர் தளும்பியது.

"அப்போ நான் வரட்டுமா?" எழுந்திருந்தாள் அவள்.

"விடிகாலையிலே எழுந்து மூணு பேருக்கு சமைச்சு வச்சிருக்கேன். சாப்பிடாமல் எப்படிப் போறது?" சாரதா வற்புறுத்த அவள் அவர்களிருவருடன் பகல் சாப்பாட்டில் கலந்து கொண்டாள்.

காலிப் பாத்திரங்களைத் துலக்கிக் கழுவித் துடைத்து அழகாக அலமாரியில் அடுக்கினாள் மனோகரி.

விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய அலமேலுவின் டின்னிலிருந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அதன் விலையைக் கொடுத்தாள் சாரதா.

"உங்களுக்கு ஏம்மா இதெல்லாம்—இப்பத்தானே என் கிட்டே வேண்டியது வாங்கினீங்க."

"பரவாயில்லை. இவை எனக்கு உபயோகமாக இருக்கும். வெளிநாட்டு நண்பர்கள் வந்தால் ஊருக்குக் கொண்டு போங்கள் என்று அப்பளம் வடகத்தை மூட்டை கட்டிக் கொடுக்க சுலபமாக இருக்குமே!" சிரித்தாள்.

"வரட்டுமா?" என்று விடை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் கிளம்பிய அலமேலுவை வாசல் வரை வழிவிடத் தொடர்ந்த சாரதா தணிந்த குரலில் கேட்டாள்.

"காலையில் புறப்பட்ட அவசரத்தில் நான் கேட்கலை. ஆனால் இப்போ நீங்க சொல்லியாகணும் மனோகரியின் பெற்றோர்களின் முகவரி எனக்குத் தேவை."

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அலமேலு.

"நான் பெயர் சொல்ல மாட்டேன்னு மனோகரிக்கு வாக்கு கொடுத்திருக்கேனே?"

"இந்தப் பெண்ணுக்கு உதவி செய்தா ரொம்ப நன்றியுடையவளாக இருப்பேன்னு கூடச் சொல்லியிருக்கீங்க. அதுக்காகவாவது என்கிட்டே நீங்க சொல்லக் கடமைப்பட்டிருக்கீங்க. ஆமாம்...அந்தப் பெண்ணின் அப்பா பெயர்... முகவரி கட்டாயம் தெரிஞ்சாகணும்."

மிகவும் ரகசியமாக அலமேலு சொன்னாள்—"ரொம்பப் பெரிய இடம். அங்கே போய் அவமானப்பட்டுக்காதீங்க. மூர்த்தி அண்ட் மூர்த்தி பில்டிங் மெட்டீரியல்ஸ்ன்னு கேள்விப்பட்டிருப்பீங்களே."

"ஆமாம்...கிரீம்ஸ் ரோடிலே ஒரு சமயம் பார்த்ததாக ஞாபகம். ஒரு பெரிய கட்டிடம்."

"பரம்பரைப் பணக்காரரா தாத்தா காலத்திலிருந்த தொழில் பேரன் காலத்தில் ஓகோன்னு பெருகிப் போச்சு. ஜெயமூர்த்திதான் இவளுடைய அப்பா. வீட்டு முகவரி ஈஸ்வரி கார்டன்ஸ் தேனாம்பேட்டை. ஒன்பதாம் நம்பர் பங்களா. வாசலில் பித்தளைத் தகட்டில் அம்பிகான்னு பெயர் தெரியும். ஜெயமூர்த்தி அம்மாவோட பேர் அம்பிகா. இப்போ பங்களாவில் இருப்பவங்க அவரோட மனைவி பார்வதி—மகன் குருமூர்த்தி, மருமக கோகிலா, அக்கா பரிமளா புக்ககத்தில் பாம்பேயில் இருக்கா. இதுக்கு மேலே நான் என்ன சொல்ல முடியும்."

"பெரிய இடத்துப் பெண்ணா இப்படி வந்து சண்பகம் கிட்டே மாட்டிக்கிண்டா?"

"தலையெழுத்து. எத்தனையோ செல்வமா வளர்ந்த குழந்தை—அந்த யோகநாதன் வீட்டிலே முழங்கை வரை சோப்புநுரையோட நின்று கொண்டிருந்ததைப் பார்த்தப்போ



—என் குடல் புரண்டு போச்சு. உங்க புண்ணியத்திலே அவள் பசியாறச் சாப்பிட்டாள்-இப்போ நிம்மதியாகத் தூங்குவா. சாரதா அம்மா, எனக்கு உங்களை என்னன்னு பாராட்டறதுன்னு தெரியலை."

"ஒண்ணும் வேண்டாம்—பாதிக் கிணறு தாண்டியிருக்கோம்—முழுவதும் தாண்டினால்தானே சந்தோஷப்பட்டுக்க முடியும்?" சிரித்தபடி அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள்.

"மனோகரி, எதிர் பக்கமாக இருக்கிற அறையிலே நீ தூங்கிக்கோ அம்மா. களைப்பா இருந்தா போய்த் தூங்கு" என்று தன் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு என்று ஒதுக்கி வைத்திருந்த அறையைக் காட்டினாள்.

அறையின் நடுவில் ஒரு கட்டில்—மெத்தை மீது வெளேரென்ற விரிப்பு. மெத்தென்றதொரு கம்பளம். துணிகளை வைத்துக் கொள்ள சிறிய இரும்பு பீரோ. கண்ணாடிகொண்ட அலங்கார மேஜை—உள்ளடங்கிய குளியலறை என்று கச்சிதமாக இருந்ததைக் கண்டதும் கண்கலங்கிப் போனாள் மனோகரி.

அவளது பெற்றோர்களின் வீட்டில் இப்படித்தான் அவளுக்கு என்று தனியாக எல்லா வசதிகளுடன் ஒரு அறை மாடியிலிருந்தது.

யோகநாதனை நம்பி ஓடி வந்த பிறகு...அவன் வீட்டில் வேலைக்காரியாக வசித்த நாளில் அவளுக்கு சண்பகம் வேண்டாத சாமான்களைக் குவித்து வைத்திருந்ததொரு அறையைக் கொடுத்திருந்தாள்.

தரையில் விரித்துக் கொள்ள ஒரு பழைய பாய்—கல் போன்றதொரு தலையணை...அறையில் மின் விசிறி கிடையாது. கோடை நாட்களில்...புழுக்கத்திலே கொசுக்கடியைத் தாங்க முடியாது புரண்டு படுக்கும் போது எலிகள் மேலே விழுந்து ஓடுவதைக் கண்டு அலறியடித்துக் கொண்டு எத்தனை முறை எழுந்து உட்கார்ந்திருக்கிறாள்.

அவள் செய்த தவறான காரியத்துக்குத் தண்டனை தருவது போல—

அந்த இரண்டு ஆண்டுகளில் அவளை சண்பகம் எத்தனை ஆட்டிப் படைத்திருக்கிறாள். குபீரென்று எழுந்த கண்ணீரை சமாளிக்க இயலாது கதவைச் சாத்திக் கொண்டு படுக்கை மீது விழுந்து மெல்ல விசும்பி அழுதபடியே உறங்கிப் போனாள்.

## 8

உள்ளுணர்வில் ஏற்பட்டதொரு உந்தலில், வேகமாக வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் சண்பகம்.

கேட்டைத் திறக்கக் கையை நீட்டியவள், எதிர்வீட்டுக் காவல்காரன் கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பினாள்.

"ஒரு டாக்ஸிலே ரெண்டு பொம்பளைங்க வந்திருந்தாங்க காலை பத்து மணி இருக்கும். நான் உள்ளாரப் போய்ட்டு வரத்துக்குள்ளே டாக்சியும் அவங்களும் மறைஞ்சு போயிட்டாங்க."

குப்பென்று வியர்த்துக் கொட்டியது அவளுக்கு. டாக்சியில் யார் வந்திருப்பார்கள்? ஒரு சமயம் மனோகரியின் பெற்றோர்கள் வீட்டிலிருந்து யாராவது தேடிக் கொண்டு? பெரிய பணக்காரங்களாமே. டாக்சியில் ஏன் வரணும்? இதென்ன கூத்து?

கேட்டைத் திறந்து கொண்டு அவசரமாக வராந்தாவை அடைந்தவளுக்கு இன்னொரு அதிர்ச்சி.

பால் பொட்டலம் அப்படியே ஒரு பிளாஸ்டிக் வாளிக்குள் கிடந்தது.

வழக்கமாகக் கொண்டு வரும் பையன் அதை மனோகரி எடுத்து வைக்கும் பிள்ஸ்டிக் வாளிக்குள் போட்டுப் போயிருக்கிறான்.



பாலைக் காய்ச்சாது மனோகரி உள்ளே என்ன செய்கிறாள்? அட வெளி ஜன்னல் எல்லாம் சாத்தப்பட்டிருக்கே. அசட்டுக் கழுதை, காஸ் சிலிண்டரைத் திறந்து வைத்துக் கொண்டு, கதவுகளை மூடிவிட்டு அடுப்பின் மேல் கவிழ்ந்து கொண்டு தற்கொலை...

ஐயோ! படபடத்த நெஞ்சோடு தன் இடுப்பிலிருந்த சாவிக் கொத்தால் வாசல் காத்ரஜ் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே தலையை நீட்டினாள்.

காஸ் வாசனை எதுவுமில்லை என்று சந்தேகம் தீர்ந்த பின் பரபரப்பாக ஜன்னல்களைத் திறந்தாள்.

சமையலறை, முன்னறை, மனோகரி உபயோகித்த அந்தக் கடைசி அறை எங்கும் சுற்றிப் பார்த்தாள்.

மனோகரியின் பெட்டி திறந்தபடி கிடந்தது. அதில் இருந்த சில துணிகளையும் காணவில்லை.

அவள் முடிவு எடுக்குமுன் பட்சி பறந்து விட்டதே! ஆத்திரத்துடன் முன்னறைப் பக்கம் வந்தாள்.

கண்ணாடி பேப்பர் வெயிட்டுக்கு அடியே நீட்டிக் கொண்டிருந்த கடித உறை கண்களில் பட்டது.

வேகமாகப் பாய்ந்து சென்று எடுத்தாள். அவளுக்கு மனோகரி எழுதியிருந்த கடிதம் அது.

'உங்கள் வீட்டு வேலை எனக்குப் பிடிக்கவில்லை. சோறு போடாது பட்டினி போட்டுச் சாக வைக்கப் பார்க்கிறீங்க. அதனால் நான் வேறு இடத்தில் வேலைக்கமர்ந்து விட்டேன். உங்கள் வீட்டு சாமான்கள் எதையும் நான் தொடவில்லை. வேணுமென்றால் உப்பு, புளியிலிருந்து எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். சந்தேகமிருந்தால் கிழ்க்கண்ட முகவரியில் என்னைத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்ணும் எழுதியிருக்கிறேன்.

மனோகரி.

தொப்பென்று சோபாவில் சரிந்து விழுந்தாள். அவள் வீட்டில் இல்லாதபோது, மனோகரி யாரோ ஒரு பெண்மணியுடன் தொடர்பு கொண்டு வெளி நடப்புச் செய்து விட்டிருக்கிறாள். அவளைச் சும்மாவா விடுவது? வரட்டும் இவர் என்று கணவனது வருகைக்காகக் காத்திருந்தாள்.

குளியலறையில் அப்படியே அழுக்குத் துணிகள் குவிந்து கிடந்தன. சமையலறையில் தேய்க்காத பாத்திரங்கள் மேடையில் கிடந்தன. முன்னறையில் பத்திரிகைகள் காலையில் போட்ட கோலத்தில் கிடந்தன. வீடு நிசப்தத்தில் சுடுகாடாக தோன்றியதைக் கண்டு அவள் வயிறு எரிந்தது.

தனக்குப் போட்டியாக வந்து விட்டவள் என்று ஆத்திரப்பட்டு பழி வாங்க, மனோகரியை வேலைக்காரியாக்கி, இடுப்பை ஒடித்துக் கொண்டிருந்தாள்.

அதிலும் ஒரு நிம்மதி இருந்தது. வேளைக்கு காப்பிடிபனும், சோறும் மேஜையில் தயாராக இருந்தன.

கூடைத் துணிகளைத் துவைத்து மறுநாள் தேவைக்குக் காயவைத்து இஸ்திரி போட்டு, தோட்டத்துக்குத் தண்ணீர் ஊற்றி, ஐயோ! இனி அப்படி ஒரு வேலைக்காரி கிடைக்க மாட்டாள். அவளால் கிடைக்க இருந்த அந்தப் பெரும் தொகையும் போய்விட்டதே! தலையில் அடித்துக் கொள்ளாத குறை.

குழந்தைகள் வீடு திரும்பியபோது காப்பி என்றதும், முதுகில் சாத்த வேண்டும் போல ஆத்திரப்பட்டாள்.

பாத்திரங்களைத் துலக்கி ஒரு வழியாகப் பசி என்று கூச்சலிட்ட குழந்தைகளுக்கு உப்புமா செய்து போட்டு மாடிக்கு விரட்டி விட்டு கணவன் வரவிற்காகக் கண்களில் கனல் எழக் காத்திருந்தாள்.

"புத்தியைத் தொட்ட கையால பிரம்மன் உம்மைத் தொடலை. மனோகரி வீட்டை விட்டு ஓடிட்டா... நாம் ஏமாந்துட்டோம்..." ஆத்திரமும் அழுகையுமாகச் சீறினாள்.



"ஓடிட்டாளா..." யோகநாதன் பிரமித்துப் போனான்.

"ஓடுகிறது அவளுக்குக் கைவந்த கலையாச்சே. அப்போ உங்களை நம்பி வீட்டைவிட்டு ஓடினா. இப்போ யாரோ ரெண்டு பொம்பளைகளை நம்பி ஓடிட்டா."

"போகட்டும் சனியன்." யோகநாதன் கூறி முடிக்குமுன் ஆத்திரத்துடன் எழுந்து நின்றாள் சண்பகம்.

"அப்படிச் சுலபமா விட்டுட இரண்டு வருஷம் வைச்சு நான் பாடுபட்டு சம்பாதிக்கற பணத்தைக் கொண்டு சோறு போட்டுக் காப்பாத்தியிருக்க வேண்டாமே? வந்தன்னிக்கே விரட்டியிருக்கலாமே?"

மென்று விழுங்கினான் யோகநாதன். 'அவளது நகைகளுக்கு ஆசைப்பட்டு இங்கே தங்க வச்சுக் கொண்டே...' அவனுக்கு சொல்லப் பயமாக இருந்தது.

"ரொம்பத் துணிச்சலா போன் நம்பரும், போன வீட்டு விலாசமும் கொடுத்துட்டுப் போயிருக்கா. நாம இப்பவே போய்ப் பார்த்துக் கேட்கலாமா?"

"வீண் வம்பு! பேசாம இருந்துட்டா..."

"நீங்க பேசாம இருங்கோ. நான் சும்மா விடப் போறதில்லை..." குமுறிக் கொண்டு காலில் செருப்புகளைத் திணித்தவள் தோள்பையுடன் வெளியே கிளம்பினாள்.

அருகிலிருந்த மருந்துக்கடை தொலைபேசிதான் அவளுக்கு அவசரத்துக்கு உதவியது.

கடையில் ஏகக் கும்பல். சாலையில் நெருக்கமாக நகர்ந்து கொண்டிருந்த போக்குவரத்தின் இரைச்சல்.

பற்களைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தில் குமுறியபடி சாரதா வீட்டுத் தொலைபேசி எண்களைச் சுழற்றினாள்.

## 9

"சீண்பகம் அம்மாள் கூப்பிட றாங்கன்னு நினைக்கிறேன். நான் எதிர்பார்த்ததுதான்" குடித்துக் கொண்டிருந்த தேநீர்க் கோப்பையை வைத்து விட்டு சாரதா எழுந்தாள்.

"என்னம்மா சொல்லப் போறீங்க" நடுங்கினாள் மனோகரி.

"தொலைபேசி வழியே அவள் உன்னை மென்றா தின்று விடுவாள். பயப்படாதே...நான் பேசப் போறேன்" என்றபடி அலறிக் கொண்டிருந்த தொலைபேசியை எடுத்தாள்.

"ஆமாம் நான்தான் சாரதா அம்மா பேசுகிறேன். மனோகரி போன்கிட்ட வர மறுக்கிறாள். என்கிட்டேயே எல்லாம் சொல்லலாம். அவளுக்குக் கை நீளமா? உங்க வீட்டிலிருந்து எதையாவது எடுத்துக்கொண்டு வந்தாளா? பேஷா. நீங்களும் உங்கள் கணவரும் வந்து சொல்ல வேண்டிய அந்த முக்கிய சங்கதியைச் சொல்லுங்க. உங்க பக்கம் நியாயம் இருந்தா கையோட மனோகரியை நீங்க கூட்டிக் கொண்டு போகலாம். ஆட்சேபணை எனக்கில்லை. தாராளமா வரலாம். நாளைக்கு மாலை ஐந்து மணிக்கு மேல் எதிர்பார்க்கலாமா? ஓகே" போனை வைத்தாள்.

"அம்மா...என்னை அவங்ககிட்டே காட்டிக் கொடுக்கவா கூட்டி வந்தீங்க?" பயத்துடன் குழறிய மனோகரிக்கு அழுகை வந்துவிட்டது.

"பைத்தியக்காரி! அவங்க வரட்டும். அவங்களை நானும் பசுபதியும் எப்படி நடுநடுங்க வைக்கிறோம் என்கிறதை நீயே வேடிக்கை பார்ப்பே" சிரித்தாள் சாரதா.

அன்று இரவு சாரதா ரங்கனை போனில் கூப்பிட்டாள்.

"மனோகரியைக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டேன். நாளை மாலை அவர்கள் இருவரும் என்னவோ முக்கிய



மானது பேச வரப் போகிறார்களாம். கவலைப்படாதே. இங்கே நண்பர் பசுபதியை கூட இருக்கச் சொல்லி ஏற்பாடு செய்யப் போகிறேன். கைகலப்பு ஏற்பட்டு விட்டாலா? பசுபதியின் மகனையும் கூடத் துணைக்கு வைத்துக் கொள்கிறேன். இரண்டு ஆண்களைப் பார்த்ததும், வருகிறவர்கள் புஸ்ஸென்று அடங்கிப் போயிடுவாங்க. அதுக்கும் மீறி ஏதாவதுன்னா உனக்கு உடனே டெலிபோன் பண்ணிடறோம். நீ வந்து விடு. உன்னை போலீஸ் உடையில் பார்த்ததும் அவர்களது சப்த நாடியும் அடங்கிடும்" கடகட வென்று சிரித்து விட்டு போனை வைத்தாள்.

மறுநாள் மாலையை சாரதா மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்தாள்.

மறுபடியும் சண்பகத்தைப் பார்க்க மனோகரிக்கு ஒரே நடுக்கம்.

## 10

மேல் தளத்திலிருந்து பசுபதியும் அவரது மகனும் குறித்த நேரத்தில் வந்து முன்னறையில் அமர்ந்து கொண்டனர்.

சொன்ன நேரத்திற்குத் தங்களது காரில் வந்து இறங்கிய யோகநாதன் தம்பதியருக்கு மூன்றாவது எண் ஃபிளாட்டைக் கண்டுபிடிக்க நேரம் அதிகமாகவில்லை.

"வாங்கோ உள்ளே..." என்று புன்னகையுடன் வரவேற்ற அந்த வயதான பெண்மணியை முறைத்தபடி முன்னறைக்குள் நுழைந்தாள். அங்கே இரண்டு ஆண்களைக் கண்டதும் கொஞ்சம் திடுக்கிட்டுப்போய் விட்டாள் சண்பகம்.

"நான் பேச வந்தது..." என்று அவள் இழுத்தபடி சாரதா காட்டிய ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

"மனோகரி சம்பந்தப்பட்ட சங்கதியில் ரகசியம் ஏதுமில்லை. இவர்கள் என் நண்பர்கள். தாராளமாக நீங்க ஒளிவு

மறைவு இல்லாமல் பேசலாம்.'' சாரதா குழைந்தாள் ''மனோகரி, நீயும் இப்படி வாம்மா. இது உன்னைப் பத்தின விஷயம்'' குரல் கொடுத்தாள்.

வாராத முடியும், அழுக்குப் புடவையுமாக சதா தென் பட்ட மனோகரி சுத்தமான நூல் புடவையொன்றில், விளக்கி வைத்த குத்து விளக்கு போல லட்சணமாகக் காணப்படுவதை பார்த்துப் பிரமித்துப் போனாள் சண்பகம்.

யோகநாதன் நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி தரையில் விரித்துக் கிடந்த கம்பளத்தை வெறித்துக் கொண்டிருந்தான்.

என்ன பேசுவது என்று ஒத்திகை பார்த்துக் கொண்டு வந்த எண்ணங்கள் எல்லாம் சிதறிப்போகவே சண்பகம் வேறு முறையைக் கையாளத் துணிந்து விட்டாள்.

''மனோகரி எங்கள் வீட்டு வேலைக்காரியல்ல. யார் அப்படிச் சொல்லி உங்களை ஏமாத்தினாங்க.'' காரமாகக் கேட்டாள் சண்பகம்.

''வீட்டு வேலைக்காரின்னுதான் நினைச்சேன். அங்கே வேலை செய்யப் பிரியமில்லை. எங்க வீட்டுக்கு வரேன்னாள். எதுக்கும் உங்களுக்குத் தெரிவிச்சுட்டு வான்னு கடிதம் எழுதி வைக்கச் சொன்னேன். நீங்க வந்திருப்பது நல்லது.''

''அவள் எங்க குடும்பத்தைச் சேர்ந்தவ. என் கணவருக்கு இரண்டாம் தாரம்.''

''அது எப்படி முடியும்? பலதார விவாகசட்டம் இருக்கும் போது, நீங்க உயிரோட இருக்கும்போது, உங்கள் கணவர் இன்னொருத்தியை எப்படி கட்டிக்க முடியும்? ரொம்பத் தப்பாச்சே. நீங்க புகார் செய்தா இவர் கம்பியெண்ணும்படி ஆயிடுமே.''

''புகார் செய்தால்தானே. நாளே ஒப்புதல் கொடுத்திருந்தால்?''

''அப்போகூடச் செல்லாது அம்மா. சட்டத்தைப் பத்தி இவரைக் கேட்போம். இவர் ஒரு வழக்கறிஞர்.'' அங்கிருந்த பசுபதியைச் சுட்டிக் காட்டினாள்.



சண்பகம் ஒடுங்கிப் போய்விட்டாள். ஆனாலும் நிலைமையைச் சமாளித்தாள். ''சட்டப்படியில்லாவிட்டால் சாஸ்திரப்படி இவளை என் கணவர் கட்டியிருக்கிறார்... மேஜர் ஆன பொண்ணு. அவ இஷ்டம்.''

''அப்போ கூட இவள் உன் கணவரைக் கட்டிக்கொள்ள முடியாது.''

''கோவில்லே வச்சுத் தாலி கட்டியிருக்காரே?''

''சட்டத்தின் முன்னால் சாமி வந்து கூட சாட்சி சொல்ல முடியாதம்மா.''

''இந்த விஷயத்திலே பெண்களைப் பாதுகாக்க சட்டம் ரொம்பக் கடுமையாக இருக்கே. மேலும் இவ உங்களோட வந்து இரண்டு வருஷமாகிறது. இப்போ இவளுக்கு வயது பத்தொன்பது. வந்தப்போ வயது பதினேழு வயசுப் பெண் மைனரைக் கடத்திக் கொண்டு வந்த குற்றம் உங்கள் மேல் சுமத்தப்படுமே.''

''வயசைப் பத்தி இவ புளுகறா. இருபத்து மூணு ஆகுது. கழுதை!'' பற்களைக் கடித்தாள் சண்பகம்.

''வயசைத் தெரிஞ்சிக்கிறது சிரமமில்லை. இவ வீட்டிலே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். காலேஜ் ரிகார்டிலே தெரியும்.''

பதறிப் போனாள் சண்பகம். ஆனாலும் விடுவதாக இல்லை.

''வீட்டை விட்டு ஓடி வந்து எங்க வீட்டிலே அடைக்கல மானாள். ஏன் ஓடி வந்தாள்னு தெரியாது. யார் வீட்டுப் பொண்ணு என்றும் தெரியாது. பெத்தவங்க பெயர் சொல்ல மாட்டேன்னுட்டா. எனக்கு உடம்பு நல்லா இல்லாம இருந்தது. நாலு குழந்தைகளுக்குத் தாயாக எனக்குப் பின்னாடி இருக்கட்டும்னு நான் வற்புறுத்தி இவருக்குக் கட்டி வச்சேன்.''

"அம்மா இவ சொல்றதே வேறயா இருக்கு. இதை நிரூபிக்க ரொம்ப சிரமம் இல்லே. இவங்க பெற்றோர் நேரில் இங்கே நேரில் வரதாக இருக்காங்க."

சில்லென்ற உணர்வு முதுகைத் தாக்க ஆடிப்போனாள் சண்பகம். பேயறைந்தது போல எதுவும் பேசத் தோன்றாது உட்கார்ந்திருந்தான் யோகநாதன்.

அதற்கு மேல் சாரதா வேறு தினுசாகப் பேச ஆரம்பித்தாள்.

"ஒரு பெரிய மனிதர் மகளை ஏமாற்றி மைனர். வயதிலே கொள்ளை நகைகளுடன் உங்க புருஷன் அழைச்சுக் கொண்டு வந்திருக்கார். நகைகளை எல்லாம் நீங்க எடுத்துக் கொண்டு.... இந்தப் பெண்ணை ரொம்பக் கொடுமைப்படுத்தியிருக்கீங்க. நீங்க இவளிடமிருந்து எடுத்துக்கொண்ட விலையுயர்ந்த நகைகளை மரியாதையாகத் திருப்பித் தந்திடுங்க. விவகாரம் இப்படியே அடங்கிப் போகட்டும். இவள் தன் பிறந்த வீட்டுக்குப் போய்ச் சேரட்டும்."

சண்பகம் பதறிப் போனாள். "இந்த ஏற்பாடெல்லாம் செய்ய நீங்க யார்?"

"பெண்களின் உரிமைகளைப் பற்றிச் சிந்தித்துப் போராடும்... இந்தப் பகுதி மாதர் சங்கத்து உறுப்பினர் நான். இது மாதிரி பெண்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை நாங்கள் அலசி ஆராய்ந்து அதற்குத் தீர்வு காண முயலுகிறோம். இப்போ மனோகரியைப் பற்றி எங்க அமைப்பில் உள்ள நூறு பெண்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

"பயமுறுத்தலை. இது பெரிய அளவிலே உருவாகி உங்கள் கௌரவத்தையே நாசம் செய்துடும். அதனாலே காதும் காதும் வச்சாப்பல நமக்குள்ளே மெல்லத் தீர்த்துக்குவோம். இந்தப் பெண்ணோட நகைகளைத் திருப்பித் தந்துடுங்கோ."

"நகைகளா? எனக்கு ஒண்ணுமே தெரியாது."



"வாங்கோ. இங்கே உட்கார்ந்துகிட்டு இந்தக் கதைகள் எல்லாம் கேட்டுக்கிட்டு பேசாம இருக்கறதுக்கு பதிலா நாம எடுக்கிற நடவடிக்கையை எடுப்போம்."

பசுபதி இப்போது இடைமறித்துப் பேசினார்.

"அம்மா சண்பகம். உங்க பக்கம் தான் ரொம்ப ஓட்டைகள் இருக்கு. மனோகரி எந்தவகையிலும் உங்க கணவனுக்கு மனைவியாக மாட்டாள். கழுத்திலே பூ மாலை போட்டுக் கோவிலில் கடவுள் முன்னால் தாலிகட்டுவதெல்லாம் மனைவி உயிரோடு இருக்கிறவனுக்குக் கல்யாணமாகாது. கம்பி எண்ணும் கேஸாகி விடும். நீங்க இந்தப் பெண்ணுக்குப் பல வழியிலே ஆபத்தைத் தேடித்தரப் பார்த்திருக்கீங்க. அசட்டுத்தனமா பம்பாய் பக்கம் இவளை அனுப்பியிருந்தாலும், போலீஸ் நடவடிக்கை எடுத்தால் நீங்க வீண் வம்பிலும் அவமானத்திலும் அகப்பட்டுக் கொண்டு விடுவீங்க. நகைகளை மரியாதையா இந்தப் பெண்கிட்டே திருப்பிடுங்கோ" அதட்டலாகப் பேசினார்.

"எனக்கு நகைகள் பத்தி எதுவும் தெரியாது." அழுத்தமாகச் சொல்லி விட்டு அதுவரை வாயைத் திறக்காது களிமண்ணாக உட்கார்ந்திருந்த கணவனுடன் புறப்பட்டுப் போனாள்.

"வழி நெடுகிலும் அவள் கணவனை வசைபாடிக் கொண்டிருந்தாள்.

"சொன்னேன் கேட்டிங்களா–சீக்கிரம் மனோகரியை பம்பாய் பக்கம் அனுப்புங்க என்றேன்—மசமசன்னு இருந்தீங்க. நகைகளை சட்டுபுட்டுனு அழிச்சு மாத்திக்கலாம்னேன்- அதுக்கும் ஏற்பாடு செய்யலை. அவ கிடக்கா. அந்த சாரதாம்மாக் கிழவி ரொம்பப் பயமுறுத்தறா. எனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு சாதிப்பேன்" என்றாள்.

## 11

"மறுநாள் காலை சாரதாவின் அழைப்பிற் கிணங்க ரங்கன் அவளுடன் கூட வெளியே செல்லத் தயாராக வந்திருந்தான். தான் திரும்பி வரும்வரை மனோகரியை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி பசுபதி ஃபிளாட்டில் அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைத்து விட்டு சாரதா கிளம்பினாள்.

சண்பகம் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தா அன் கோ மின்விசைப் பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்ததொரு பெரிய நிறுவனம். நகரத்தில் அதற்குப் பல கிளைகள் இருந்தன. அண்ணாசாலை அலுவலகத்திலே விற்பனைப் பகுதியிலே சண்பகம் தலைவருக்கு உதவி அலுவலராக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாரதாவும்—இன்ஸ்பெக்டர் ரங்கனும் ரிஸப்ஷன் அருகே வந்து, 'மானேஜரைப் பார்க்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தபோது...ரிஸப்ஷன் பெண்...கலவரத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். இண்டர்காமில் செய்தியை மானேஜருக்குத் தெரிவிக்க, ஒரு சில நிமிஷங்களில் அவர்களுக்கு மானேஜரிடமிருந்து அழைப்பு வந்து விட்டது.

அதுசமயம் சண்பகம் கீழ்ப்பக்கமிருந்த கோடவுனுக்கு ஏதோ காரியமாக இரண்டு ஊழியர்களுடன் சென்றிருந்தாள்.

அவளுக்கு சாரதா அங்கே வந்திருப்பது தெரிந்திருக்கவில்லை.

சங்கதியைக் கேட்ட மானேஜர் சுழல் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"இது அவர்களது சொந்தப் பிரச்னை. என்னிடம் கேட்டால்? இதில் நான் எப்படித் தலையிட முடியும்?" கொஞ்சம் அழுத்தமாகப் பேசினார்.

இது மாதிரி சாரதாவுக்கு எத்தனை அனுபவங்கள்.

அவள் அசைந்து கொடுக்கவில்லை.



"உங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஒரு உயர்மட்ட அதிகாரி தன் கணவனை ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டு ஒரு பெரிய இடத்துப் பெண்ணை காதல் என்று தூபம் போட்டு ஓடி வரச் செய்து இரண்டு வருஷ காலம் தன் வீட்டிற்குள் ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாள். அடித்து—உதைத்து இம்சை செய்ததுடன், அந்தப் பெண் தன்னுடன் கொண்டு வந்த விலையுயர்ந்த நகைகளைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள் என்று பத்திரிகையில் ஒரு சோகக் கதையை பிரசுரிக்க ஏற்பாடு செய்து விடுவேன். இந்த அபலைப் பெண்ணின் போட்டோவிலிருந்து, தாம் எந்த உதவியும் செய்ய முடியாது என்று கைவிரித்த மானேஜர் என்று உங்களது போட்டோ வரை வரும். நாலு சுவர் உள்ள இந்த அறைக்குள்ளே நாம் பேசும் இந்த சங்கதி நாலு லட்சம் பிரதிகளில் அச்சடிக்கப்பட்டு நாற்பது லட்சம் மக்களால் படிக்கப்படும். இதைச் சொல்லிப் போகத்தான் வந்தேன். கூட போலீஸ் அலுவலர் எதற்கு என்கிறீர்களா?

"இவர் எங்கள் குடும்ப நண்பர். கொஞ்சம் கூட துணைக்கு அழைத்து வந்தேன். சுமுகமாகக் காரியம் முடியாவிட்டால், இவர் மூலம் போலீஸ் நடவடிக்கை எடுக்க உத்தேசம். இது எங்கள் மாதர் சங்கத்துத் தீர்மானம்" என்றாள்.

ஏ.சி. அறையின் குளுமையை மீறி மானேஜரின் காதோரத்தில் வியர்வை அரும்பி வழிந்தது.

காலை வேளையில் இதென்ன சங்கடம்? உண்மையில் இந்த சண்பகம் அம்மாளுக்கு இத்தனை துஷ்டத்தனமா? எங்கே கதை கிடைக்கப் போகிறது என்று அலையும் பத்திரிகை நிருபர் எவர் காதிலாவது சங்கதி விழுந்து விட்டால் அவ்வளவுதான். அந்த நிறுவனத்தின் முதலாளி பம்பாயிலிருந்து பறந்தோடி வந்து விடுவார். அப்புறம் நடக்கிற சங்கதியே வேறாக இருக்கும். பலவும் தமக்குள் எண்ணி இண்டர்காமில் ரிஸப்ஷன் பெண்ணை அழைத்தார். "திருமதி சண்பகத்தை இங்கே வரச்சொல்" உத்தரவிட்டார்.

# 12

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்த சண்பகம் சாரதாவைக் கண்டு அதிர்ந்து போனாள்.

அருகில் காக்கிச் சீருடையில் அமர்ந்திருந்த காவல்துறை அதிகாரியைக் கண்டதும் மிகவும் பயந்து போய் விட்டாள்.

கிழவி லேசுப்பட்டவள் இல்லை போலிருக்கே. அவளைப் பற்றி என்ன புகார் சொல்ல இங்கே வந்து தொலைத்திருக்கிறாள்?

அவளுக்கு நாக்கும் தொண்டையும் வரண்டு போனது.

“என்ன ஸார்? கூப்பிட்டீங்களாமே...” என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

“இப்படி உட்காருங்க. இவங்க உங்க பேரில் ஒரு பெரிய புகார் கொண்டு வந்திருக்காங்க. இவங்க பெயர் சாரதா. இவங்க உங்க வீட்டிலிருந்து ஒரு பெண்ணை மீட்டிருக்காங்களாம். சதாசிவம் சாலை மாதர் சங்கத்தின் முயற்சியாம் அது.”

மௌனமாக உட்கார்ந்தாள் சண்பகம். “எங்கள் சொந்த விஷயத்தை அலுவலகத்துக்குக் கொண்டு வரதின் நோக்கம்?” துணிச்சலாகவே கேட்டாள் சண்பகம்.

“இது இப்போது இவங்க மாதர் சங்கத்துப் பிரச்னையாகிட்டது. இதை நான் கவனிச்சு உதவாட்டா இவங்க சங்கம் கொடி பிடிச்சுக் கொண்டு இங்கே வந்து கலாட்டா செய்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. இதில் சம்பந்தப்பட்டிருக்கிற பெண் நம்ப முதலாளிக்குத் தெரிந்ததொரு பெரிய மனிதர் மகள். இது சாதாரண சங்கதியில்லை. உங்க வீட்டு சங்கதி மட்டுமில்லே. இதைப் பற்றிய தகவல் பத்திரிகையில் வந்தால், நமக்குத் தொல்லைகள் ஏற்படும். அதனாலே இவங்களது கோரிக்கைக்கு நீங்க சம்மதிக்கிறது தான் சரியான முறை.”

“இவர்கள் சொல்ற நகைகள் எங்கிட்ட இல்லேன்னு சொல்றேன்.”



“அதை நிரூபிக்கணும். போலீஸில் புகார் கொடுத்து, உங்க வீட்டை சோதனை போடத் துவங்கினால்...”

உதட்டைக் கடித்துக்கொண்டாள் சண்பகம். “மனோகரி வரும்போது ஏதோ சில நகைகள் கொண்டு வந்தாள். அதுகளை வாங்கி நான் பத்திரமா லாக்கரில் வச்சிருக்கேன் வேறே பெரிய உருப்படிகள் ஏதும் இல்லை.”

“இருக்கிறதை எடுத்துக் கொடுத்துட்டு இந்த வம்பிலிருந்து விலகிக் கொள்ளுங்கோ அம்மா இதுதான் நான் உங்களுக்குச் சொல்கிற புத்திமதி. இல்லாட்டா இவங்க நேரே நம்ப முதலாளிகிட்டே போய்விடுவாங்க.”

“மேடம்...காரியத்தை வளர்த்தாம கச்சிதமா முடிக்கணும்னா நாளைக்கு சாயங்காலத்துக்குள்ளே சாரதாம்மா கிட்டே இரண்டு பேரை சாட்சியாக வச்சுக் கொண்டு நகைகளை ஒப்படைச்சுடணும். அத்தோட உங்க பொறுப்பு தீர்ந்துடும். உங்ககிட்ட மறுபடி அந்த மாதர் சங்கம் எந்தவிதப் புகாருடனும் அணுகாது. அதுக்கு நான் உத்திரவாதம்” என்றான் ரங்கன்.

“என் கணவருடன் நாளை சாயங்காலம் ஆறு மணிக்கு தான் வருகிறேன்” என்று கூறிவிட்டு மௌனமானாள்.

வணக்கம் தெரிவித்து விட்டு இருவரும் வெளியே வந்தனர்.

“நீங்க பெரிய ஆசாமி... இந்தக் கதை உங்க மாதர் சங்கத்துப் பக்கமே எட்டலை. ரொம்பவே அந்த மானேஜரை பயமுறுத்தி விட்டீங்க” சிரித்தான் ரங்கன்.

“நீ மட்டுமென்ன? கடைசியாத்தான் வாயைத் திறந்தே முதலில் உன் காக்கிச் சட்டை அவளை ஒரு கலக்குக் கலக்கிட்டதே!” கூடச் சிரித்தபடி, சாலைக்குள் புகுந்து ஒரு ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டு ரங்கனுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு வீடு வந்து சேர்ந்தாள்.

## 13

சாரதா அன்று பகல் உணவுக்குப்பின் நிம்மதியாக உறங்கினாள். அன்று மாலை அவள் தன்னுடன் மனோகரியைக் கூட்டிச் சென்று துணிக்கடையில் இரண்டு வாயில் புடவைகளை வாங்கித் தந்தாள். ஏற்றதான வண்ணத்தில் இரண்டு ரவிக்கைத் துண்டுகளை வாங்கித் தனக்குத் தெரிந்த தையற்காரரிடம் கொடுத்து அவசரமாக அந்தப் பெண்ணுக்குத் தைத்துத் தர வேண்டும் என்று அளவு ரவிக்கையுடன் தந்தாள்.

"அம்மா, என் பெற்ற தாயைவிட என்கிட்டே நீங்க பரிவு காட்டுறீங்களே! எதுக்கு இதெல்லாம்?" மனோகரி நன்றி உணர்வால் நெஞ்சு நெகிழ்ந்து கேட்டாள்.

"நீ கையோடு கொண்டு வந்திருக்கும் உன் பழைய துணிகளை வேலைக்காரியிடம் கொடுத்து ஏழைப்பெண் யாருக்காவது கொடுத்துவிடச் சொல்லப் போகிறேன்.

"பழைய துணிகளைத் தூர எறிவதுபோல நீ அந்தப் பயங்கர நினைவுகளையும் தூர எறிந்து விட்டுப் புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு...

"பட்டும் பனாரசும் உனக்கு நான் வாங்கித் தர்வில்லை. இரண்டு வாயில் புடவை, அதுவும் தள்ளுபடி விலையில் வாங்கித் தருகிறேன். இந்த அளவு ஒரு அபலைப் பெண்ணுக்கு உதவ என்னால் முடியும்—அதனால் செய்கிறேன்" என்றாள்.

வீட்டுக்கு வந்ததும் புடவைப் பார்சலை அவள் கையில் சாரதா கொடுத்தபோது உணர்ச்சி, வசப்பட்டுப் போன மனோகரி அவளை இறுக அணைத்துக் கொண்டு விம்மி அழுதாள்.

"எதுக்கு அழறே? எல்லாம் நல்லபடியா முடியப்போறது" அதட்டினாள்.

"எத்தனை பெரிய தவறு செய்திருக்கேன்? அப்படியிருந்தும் என்னை மன்னிச்சு எனக்கு உதவ வந்திருக்கும் உங்கள் தாராள மனசை நினைச்சு..." விம்மினாள்.



"இனிமேல இதுமாதிரி தவறு ஏதும் செய்யாம புத்திசாலிப் பெண்ணா நீ நல்லபடியா வாழணும் அதுதான் என் ஆசை" என்று ஆறுதல் கூறியபடி அந்த அபலையின் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தாள் சாரதா.

'ஒரு மனோகரியை எப்படியோ சாமர்த்தியத்தால் மீட்டுக் கொண்டு வந்து விட்டேன். இன்னும் எத்தனை மனோகரிகள் அறியாமையால் ஆபத்தில் சிக்கிக் கொண்டு அழிந்து கொண்டு இருக்கிறார்களோ? பள்ளிக்கூட அளவிலேயே பெண் குழந்தைகளுக்கு அவர்களைப் பாதிக்கும் சட்ட நுணுக்கங்களைப் போதிக்க வழி செய்ய வேண்டும். இந்த ஆண்டு மாதர் சங்கத்துக்கூட்டத்திலே இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டியது அவசியம். பெண்களுக்குத் தொழிற் கல்வி—சட்ட நுணுக்கம் பற்றிய அறிவு என்பது மிகமிக முக்கியம் என்பதை மனோகரிகள் பலர் நிரூபிக்கின்றனரே!' தனக்குள் பலவும் எண்ணிக் குமைந்தாள்.

## 14

அன்று மாலைப் பொழுது அமரும் நேரத்தில் ஏற்பாட்டுப்படி பசுபதியும் ரங்கனும் அங்கு வந்து சேர்ந்தனர்.

முதல்நாள் மாலையில் வீட்டுக்கு வந்த சண்பகம் கணவனுடன் ஒரு மூச்சு சண்டை போட்டு விட்டிருந்தாள்.

மைசூருக்கு மனோகரியை அழைத்துக் கொண்டு சென்றிருந்த சமயம் விற்றுத் தொலைத்தது போக மீதமுள்ள அவளது நகைகள் அத்தனையையும் திருப்பித் தந்துவிட வேண்டுமென்று வாதம் செய்தாள்.

வைர வளைகள் இரண்டை அமுக்கிக் கொண்டுவிட வேண்டும் என்கிற ஆவல் அவளுக்கு.

விஷயம் விபரீதமாகி விட்டதைக் கண்டு யோகநாதன் ரொம்பப் பயந்து விட்டான்.

"வேலை போய் நாமிருவரும் கம்பியெண்ணுவோம்-- குழந்தைகள் நடுவீதியில் நிற்பார்கள். வேண்டாம் உனக்கு இந்த ஆசை" என்று துணிவாகவே அவன் பேசி விட்டான்.

மறுநாள் இருவரும் வங்கி லாக்கரிலிருந்து அவளது நகைகளை எடுத்து வந்தனர்.

ஒரு பிளாஸ்டிக் டப்பாவுக்குள் போட்டு மூடி எடுத்துக் கொண்டாள். இடையே இரண்டொரு தங்க நகைகளை அவளும் விற்றுத் தொலைத்திருந்தாள். மனம் கேட்காது வைர நகைகளைப் பத்திரப்படுத்தியதன் விளைவு—அவைகளை இழக்கப் போகிறாள்—ஆத்திரத்தில் அனலாகக் கொதித்துக் கொண்டு தங்களது காரிலிருந்து இறங்கினாள்.

"வாயைத் திறக்காம இருங்கோ. நான் பேசிக்கிறேன்" என்று அதட்டிவிட்டு, உள்ளே வந்தாள்.

முன்னறை காப்பி மேஜை மீது அவள் பரத்தி வைத்த நகைகளைத் திகைப்புடன் சாரதா பார்த்தாள்.

பாவி மனுஷன், சில லட்சம் பெறும் நகைகளுடன் ஒரு மைனர் பெண்ணை அடித்துக் கொண்டு போயிருக்கிறானே இவனுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும். இந்த மாதிரியான ஏமாற்றுப் பேர்வழிகளுக்குத் தூக்குக் கூட ரொம்பக் குறைச்சலான தண்டனையாக இருக்கும். எண்ணி வெகுண்டாள்.

"மனோகரி வந்து பார். சரியா இருக்கான்னு கவனி" என்று அதட்டிக் கூப்பிட்டாள் சாரதா.

## 15

மனோகரி அங்கே வந்து நகைகளை உற்றுப் பார்த்தாள். "தங்க வளையல்களில் ரெண்டு குறைகிறது. ஒரு தங்கச் செயினைக் காணலை" என்று முனகினாள்.



"அதுகளை வித்துதான் உனக்குச் சேலை, ரவிக்கை வாங்கித் தந்தேன். ரெண்டு வருஷம் தண்டச்சோறு ஆகாயத்திலிருந்தா வந்து விழும்னு நினைச்சே."

"அம்மா, கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கோ. ரெண்டு வருஷம் இவ வேலை செஞ்சதுக்கு சம்பளம் என்ன தந்தீங்கன்னு இப்போ நான் கேட்கத் தேவையில்லை. மனோகரி நல்லாப் பார். இன்னும் ஏதாவது காணலைன்னா சொல்லு."

"பச்சைக்கல்லும் வைரமும் பதிச்ச மோதிரம். என் பாட்டி எனக்குப் பரிசாகத் தந்தது. அதைக் காணலை."

யோகநாதன் மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு திருதிருவென்று விழித்தான்.

இந்த மாதிரியான ஆபத்தான சமயத்தில்கூட சண்பகத்துக்கு ஏனோ இந்த அல்ப புத்தி! காலையில் வந்தபோது அது மற்ற நகைகளுடன்கூட இருந்ததே!

"ஓ! அதுவா" என்று கூறிய சண்பகம் கொஞ்சமும் அயராது, தன் தோள் பையிலிருந்ததொரு சிறு வெல்வெட் பெட்டியை எடுத்து வைத்தாள்.

சாரதா அதைத் திறந்து பார்த்தபோது திடுக்கிட்டுப் போனாள்.

பல ஆயிரம் மதிப்புள்ள அந்த மோதிரத்தையாவது சுருட்டிக்கொண்டு விடலாம் என்று திட்டமிட்ட சண்பகம் பெண் இல்லை பேராசை பிடித்த பேய்.

அசட்டுப் பெண் மனோகரியை ஆட்டிப் படைத்த குரூர மனம் கொண்ட கொலைக்காரி.

இது மாதிரியான பெண்கள் சிலர் இருப்பதால்தான்—பெண்களின் முதல் எதிரி பெண்கள் என்று பேசப்படுகிறது.

கோபத்துடன் மோதிரப் பெட்டியை மனோகரியிடம் கொடுத்தாள் சாரதா.

பின்னர் நகைகள் பற்றிய ஒரு குறிப்பை எழுதி-பெற்றுக் கொண்டதாக—மனோகரி கையெழுத்திட, சாரதா சாட்சிக் கையெழுத்துப் போட்டாள்.

பசுபதி—ரங்கன் இருவர் முன்னிலையிலும் மனோகரி தனது நகைகளைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

அதற்கு மேல் தனக்கு வேலையில்லை என சண்பகம் தலையை அழுத்தமாக ஆட்டிவிட்டு ஆட்டுக்குட்டியாகப் பின் தொடர்ந்த கணவனுடன் வெளியேறி விட்டாள்.

## 16

பசுபதியும்— ரங்கனும் விடை பெற்றுக் கொண்டு சென்ற பின்னர் உள்ளே வந்த சாரதாவின் கைகளில் அந்த நகைப் பெட்டியை வைத்தாள் மனோகரி.

திடீரென்று அவளது காலடியில் விழுந்து விசும்பி அழத் தொடங்கினாள்.

சாரதா பதறிக் கொண்டு அவளைத் தூக்கி நிறுத்திச் சமாதானம் செய்தாள். "எதுக்கு அழறே" அன்புடன் அதட்டினாள்.

"இந்த நகைகளை எப்படியோ மீட்டுக் கொடுத்திட்டீங்க. ஆனால் அழிஞ்சு போன என் பெண்மையை மீட்டுத்தர யாராலும் முடியாதேன்னு நினைச்சுக் கொண்டேன்" விம்மினாள் மனோகரி. ஆதரவுடன் அவளை அணைத்துக்கொண்ட சாரதா மெல்லிய குரலில் இதமாகப் பேசினாள்.

"உன் வாழ்க்கை ஒண்ணும் அழிஞ்சி போகலை—தவறு செய்ததைப் புரிந்து கொண்டு விட்டதுமே உனக்கு நல்ல வருங்காலம் இருக்கிறதுன்னு அர்த்தம். விளையாட்டுத்தனமாக வளர்க்கப்பட்ட செல்லப் பெண்ணாக இருந்தே வெளி உலகத்தின் சபலங்களைத் தெரிஞ்சுக்காம ஒரு விபரீதத்தைச் சந்திச்சுட்டே. பழைய அனுபவங்களை ஒரு கெட்ட கனவாக நினைச்சு மறந்துடு. இனி நீ புதுசா வாழ நினைக்கணும் அம்மா."



"என்னை எங்கேயாவது ஒரு கருணை இல்லத்திலே சேத்துடுங்கோ. வேணுமானால் இந்த நகைகளை வித்து அவங்களுக்கு நன்கொடையா ஒரு கணிசமான தொகை தந்துடலாம்."

"மேற்கொண்டு என்ன செய்யலாம்னு நான் சிந்திச்சு முடிவு எடுக்கிறேன். நீ நிம்மதியா இங்கே கவலையில்லாமல் இரு, அது போதும்" என்றாள் சாரதா அன்புடன்.

## 17

மறுநாள் காலையே அந்த முடிவுடன் எழுந்திருந்தாள் சாரதா. இனி எதையும் தள்ளிப் போட்டுக் கொண்டு பொழுதை வீணாக்குவதில் பயன் இல்லை என்ற தீர்மானத்துடன் காப்பி டிபனுக்குப் பின் வெளியே செல்ல ஆயத்தமானாள்.

"ஞாயிற்றுக்கிழமை. கடைகள் பலதும் மூடியிருக்குமே... வெளியே போகத் துணையாக நான் வரட்டுமா?" மனோகரி கேட்டபோது அவள் தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

யாருக்கு இப்போது யார் துணை?

மனோகரியை பசுபதியின் குடும்பத்தாரிடம் கொண்டு விட்டுவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

தேனாம்பேட்டை ஈஸ்வரி கார்டன் என்ற பகுதியில் எழும்பியிருந்த பங்களாக் குவியலில்—ஒன்பதாம் எண்ணைத் தேடிக் கொண்டு செல்ல அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மதில்சுவரில் பதித்திருந்த 'அம்பிகா'...என்ற பெயர் சூரிய வெளிச்சத்திலே கண்களைக் கூசச் செய்தது.

பெரிய மனிதர் பங்களாவின் அடையாளமாக, கேட்டருகே காக்கிச்சட்டைக் காவலாளி ஸ்டூல் மீது உட்கார்ந்து கொண்டு...தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

தோட்டத்திலே இன்னொரு வேலையாள்...கன்றுக்குட்டி போன்றதொரு நாயைச் சங்கிலியில் கட்டிப்பிடித்து இழுத்துக் கொண்டு வளைய வந்து கொண்டிருந்தான்.

சாரதாவைக் கண்டு அது போட்ட குரைப்பில் பங்களா அதிர்ந்தது.

''யாரும்மா நீங்க''...காவல்காரன் அதட்டினான்.

இது மாதிரியான பந்தாக்களை எதிர்பார்த்து சாரதா முன்கூட்டியே ஜெயமூர்த்தியை முதல் நாள் காலையிலேயே தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தாள். ''உங்கள் மகள் மனோகரியைப் பற்றிய செய்தி. அவள் சதாசிவம் சாலை மாதர் சங்கத்துப் பாதுகாப்பில் இருக்கிறாள். இதைப் பற்றிப் பத்திரிகையில் ஒரு செய்தி கொடுக்குமுன் உங்களிடம் பேச விரும்புகிறேன். நான் மாதர் சங்கத்துச் செயற்குழு உறுப்பினர். ரொம்ப அவசரமாக இருப்பதால்...ஒரு ஐந்து நிமிஷம் உங்களைப் பார்க்க விரும்பறேன்.''

ஜெயமூர்த்தி அதிர்ந்து போய்விட்டார்.

மனோகரிக்கு தலை முழுக்குப் போட்டு விட்டதாக நினைத்துக் கொண்டு அவளை மறந்து வாழும் போது இது என்ன திடீர் தாக்குதல்?

''ஞாயிற்றுக்கிழமை காலை எங்கள் பங்களாவுக்கு வர முடியுமா?''—ஒப்புதல் கொடுத்தார்.

''அய்யாதான் வரச் சொன்னார். சாரதா அம்மா வந்திருக்காங்கன்னு போய்ச் சொல்லு'' பதிலுக்கு அவள் அதட்டினாள்.

உள்ளே போய் வந்த காவல்காரன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு கேட்டை அகலத் திறந்து வழி விட்டான்.



வரவேற்பறையில் வீடே திரண்டு விட்டிருந்தது. ''உட்காருங்க அம்மா. நீங்க கொண்டு வந்திருக்கும் செய்தியை வீட்டில் உள்ள எல்லோரும் தெரிஞ்சுக்கிறது நல்லதுன்னு எல்லாரையும் உட்கார வச்சிருக்கேன். இவங்கள்ளாம் யார்னு...'' அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்தவர் போன்ற தோற்றத்திலே வாட்ட சாட்டமாகக் காணப்பட்டவர் பேசியபோது அவர்தான் ஜெயமூர்த்தி, மனோகரியின் தந்தை என்பதைக் கண்டு கொண்டாள்.

''தேவையில்லை. எனக்கு இங்கே உள்ள அத்தனை பேரையும் தெரியும். இவங்க உங்க மனைவி திருமதி பார்வதி —இவர் மகன் திரு. குருமூர்த்தி. இவங்க மருமகள் திருமதி கோகிலா. இவங்க...'' என்று நிறுத்திவிட்டு சோபாவில் அமர்ந்திருந்த அழகான இளம் பெண்ணை மேலும் கீழும் பார்த்தாள்.

''இவள் என் மூத்த மகள் பரிமளா. பம்பாயிலிருந்து ஓய்வாக இருக்கக் குழந்தையோட நேத்துதான் வந்தாள். இதுதான் என் மொத்தக் குடும்பம்'' கடுமையான குரலில் பேசினார் குருமூர்த்தி.

வரவேற்பறையில் பெரிதாக மாட்டப்பட்டிருந்த கோட் சூட் ஆசாமியாக படத்தில் தெரிந்த குருமூர்த்தி இப்போது பட்டுக்கரை வேட்டி, மல் ஜிப்பாவில் பட்டையாக விபூதியும் குங்குமப் பொட்டுமாக ரொம்ப வைதீகமான தோற்றத்திலே உட்கார்ந்திருந்தார்.

''மனோகரி என்ற கடைசிப் பெண்ணை விட்டு விட்டீர்களே'' என்று சாரதா புன்னகைத்தபோது எரிமலையாக வெடித்தார் அவர்.

## 18

''என் தாத்தா சம்பந்தமூர்த்தி பேர் சொன்னாலே அழுத பிள்ளையும் வாயை மூடும். அத்தனை ஒரு கண்டிப்பானவர். எங்கள் குடும்பம் திடீர் பணக்காரர் வகையைச் சேர்ந்ததில்லே

பத்து தலைமுறையா கௌரவமா வாழற பரம்பரையைச் சேர்ந்தது. எப்போ தறுதலைத் தனமா வீட்டை விட்டு நகைகளைத் திருடிக்கிட்டு ஓடினாலோ அன்னிக்கே அவ செத்துப்போயிட்டான்னு நாங்க மறந்துட்டோம்."

"கௌரவம் என்கிறது நாமே சுயமாக உருவாக்கிக்கிற ஒரு சங்கதி. பரம்பரையாக வரும் சொத்து அல்ல—மனோகரி உங்க கௌரவத்தை நாசம் பண்ணிட்டதாக நீங்க நினைக்கி றீங்க. அவ என்ன நினைக்கிறா தெரியுமா?"

"என்ன நினைக்கிறாளாம்?" கோபத்துடன் இடை புகுந்தாள் மருமகள் கோகிலா.

"அம்மா, இது பெரியவங்க பேசற சங்கதி. உன் பெற் றோர்கள் உன்னை சாமர்த்தியக்காரியாக வளர்த்துட்டாங்க. அதனாலே நீ இப்படிக் கேட்கிற."

"என்ன சொல்ல இப்படி சுத்தி வளைக்கிறீங்க?" ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் மகன் குருமூர்த்தி.

"மனோகரியைச் செல்லமா....நீங்க சகல வசதிகள் கொடுத்து வளர்த்தீங்க. ஆனால், நல்லது கெட்டது எதுன்னு சொல்லி வளர்க்கலை. அவ கல்லூரியிலிருந்து எப்போ திரும்பி வரா—யார் அவ சிநேகிதி—எதுக்கு காரில் வெளியில் போறா?—எதையாவது நீங்க கவனிச்சதுண்டா? ஆண் பிள்ளைகள் ரெண்டு பேருக்கும் வியாபாரம் முக்கியமா யிருந்தது."

"அவ ஓடினதுக்கு என்மேல் ஏன் பழி?" கிறீச்சிட்டாள் கோகிலா.

"காலை வேளையிலே இங்கே வந்து என்னம்மா கலவரம் பண்றீங்க?" பெரிய மகள் அதட்டினாள்.

"அம்மா பரிமளா, உனக்குச் சிரான வாழ்க்கை அமைஞ் சுட்டதால கொஞ்சம்கூட ஈவு இரக்கமில்லாம, தங்கையைப் பத்தி நினைக்காமப் பேசறே. உன் வாழ்க்கை அப்படி எக்கச் சக்கமாயிருந்தா பேசமாட்டே."



"எல்லோரும் சும்மா இருங்கோ. என் பிசகுன்னு ஒப்புக் கிறேன் அம்மா. மனோகரியை நான் பத்திரமாப் பாதுகாத்து அறிவு சொல்லிக் கொடுத்து வளர்த்திருக்க வேண்டியது—தவறிட்டேன். மனோகரி செய்த பிசகுக்கு நான்தான் காரண கர்த்தா. இரண்டு வருஷமா என் குழந்தை எங்கே இருக்கா ளோன்னு இந்தப் பாழும் மனசு தவிச்சது அழுதது யாருக்கும் தெரியாது" சொல்லிவிட்டுக் குலுங்கி அழுது விட்டாள் பெற்றவள்.

"உங்க மகளைக் கடத்திக் கொண்டு போனவனைக் கண்டு பிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க உங்களுக்குக் கௌரவம் குறுக்கிட்டது. மகளை விட உங்க மானப் பிரச்னை தான் முக்கியமாயிருந்தது. போலித்தனமான கௌரவம்கிற ஒரு போர்வையிலே மனிதாபிமானத்தை இழந்துட்டீங்க. இந்த ஊரிலேயே உங்க மக ஒரு கொடுமைக்காரி கையில் அகப்பட்டு—வேலைக்காரியா அவ வீட்டிலே வேலை செஞ்சு—பட்டினியில் பரிதவிச்சு—அடிவாங்கி...."

"அம்மா....சொல்லாதீங்க. என் ரத்தம் கொதிக்குது. என் பெத்த வயிறு..." ஓவென்று அழுதாள்.

அதிர்ந்து போய் அமர்ந்திருந்தனர் அனைவரும்.

"எங்க மாதர் சங்கத்து மூலம் அவளை மீட்டு விட்டிருக் கோம். இது மாதிரியான சந்தர்ப்பங்களில் பெற்றவர்கள் தங்கள் குழந்தைகளை ஏற்க மறுக்கும் போது அவர்களை மகளிர் காப்பு இல்லத்திலே சுய விருப்பமாகச் சரணடையச் செய்கிறோம். இது தர்மமா முறையான்னு யோசியுங்கோ...

"பெத்தவங்க தங்க குழந்தைகளை மன்னிச்சு ஏத்துக்காத போது மூடநம்பிக்கைகளிலும்—குறுகிய கொள்கைகளிலும் மூழ்கி விட்டிருக்கும் ஒரு சமூகம் மன்னிக்குமா? யோசிச்சுப் பாருங்க. இது மாதிரியான சங்கதி உங்க ஒருவர் வீட்டில் மட்டும் நடந்துவிடவில்லை!

"எத்தனையோ மனோகரிகள் அறிவு கெட்டுப் பல விபரீதங்களுக்கு ஆளாகியிருக்காங்க.

"அவங்களை மீட்டு மறுவாழ்வு தரதுதான்...ஒரு புதிய நோக்கு, வளரும் சமூகத்தின் நற்பணின்னு நினைக்கும்போது உங்களைப் போலப் பெரிய மனுஷங்க இந்த சீர்திருத்தக் கருத்தை ஆதரிக்காமப் பின் தங்கலாமா? உங்க குழந்தையை ஏத்துக்கிறதுன்னா நீங்களும் உங்கள் மனைவியும் நாளை காலை என் வீட்டுக்கு வாங்க. இல்லேன்னா நாங்க அவளை வேறு எங்கேயாவது ஒரு ஆசிரமத்தில் சேர்த்து விட முயலுவோம். ஆனால் ஒண்ணு. இதுவரை நீங்க மூடி வச்ச சங்கதியை இனி மூடி வைக்க முடியாது. ஒவ்வொரு மாத முடிவிலும் எங்கள் சங்கம் பெண்களின் உரிமைக்காக எந்த வகையில் பாடுபட்டிருக்கிறது என்பதைப் பத்திரிகைகளுக்குச் செய்தியாக அனுப்புகிற வழக்கம் உண்டு. அந்த வகையில் பத்திரிகைகாரர்களுக்கு இது ஒரு நல்ல கதையாகிவிடப் போகிறது" கூறிவிட்டு பதிலை எதிர்பாராது எழுந்து வெளியே வந்து விட்டாள்.

இந்த மாதிரியான திடீர் தாக்குதலுக்கு எத்தகைய வலிமை உண்டு.

அவளது ஊகம் வீண் போகவில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

## 19

மறுநாள் காலை ஒன்பது மணியளவில் ஜெயமூர்த்தியின் படகுகார், காவேரி நர்மதா மான்ஷன் அருகே வந்து நின்றது. கணவனும் மனைவியும் அதிலிருந்து இறங்கி மாடிப்படிகள் பக்கம் வருவதை சாரதா ஜன்னல் வழியே பார்த்து விட்டாள்.

கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தயாராகக் காத்துக் கொண்டிருந்தாள்.

தயக்கத்துடன் உள்ளே நுழைந்த இருவரையும் முன்னறையில் உட்கார வைத்துவிட்டு 'மனோகரி' என்று குரல் கொடுத்தாள்.



தயக்கத்துடன் அருகே வந்த மனோகரி பெற்றோர்களைக் கண்டதும் தாங்க முடியாது விசும்பி அழ, தமது கௌரவத்தையும் கோபத்தையும் உதறிவிட்டு அப்பா ஜெயமூர்த்தி மகளை அணைத்துக் கொண்டு, "அம்மா குழந்தை, எங்களை விட்டு..." மேலே பேச முடியாது திணற, அவரது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் மனோகரியின் கழுத்தில் சிதற..."பாவிகள் உன்னைப் பழுக்கக் காய்ச்சின கம்பியாலே சுட்டாங்கலாமே....என் செல்லமே எத்தனை பாடுபட்டு போயிட்டே" என்று அம்மா திணற, சாரதா அவர்களை அங்கே விட்டுட்டு உள்பக்கம் சென்றாள்.

"இதெல்லாம் எதுக்கு?" மரத் தட்டிலே அவள் சுமந்து கொண்டு வந்த குளிர் பானங்களையும் தட்டிலிருந்த பாதாம் கேக்கையும் பார்த்து ஜெயமூர்த்தி கேட்ட போது சாரதா புன்னகைத்தாள். "மனோகரியை உங்களோடு சேர்த்துவச்ச அந்த ஆனந்த சங்கதியைப் பார்க்கும் போது ரொம்ப மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்த வெற்றியைக் கொண்டாட இனிப்பு வழங்குகிறேன். டயாபிடிஸ்—டயட்னு ஏதும் மறுப்புச் சொல்லாம சாப்பிடுங்க." உற்சாகப்படுத்தி உபசரித்தாள் சாரதா.

மனோகரியையும்—அவளது நகைப் பெட்டி, துணி இத்தியாதிகளையும் ஜெயமூர்த்தியிடம் ஒப்படைத்து விட்டு சாரதா சொன்னாள்.

"மனோகரி விட்டுப்போன கல்லூரிப் படிப்பைத் தொடரட்டும். பிறகு ஒரு நல்ல பையனாகப் பார்த்து..."

"அம்மா, நிச்சயமாக என் குழந்தைக்கு நான் மறுவாழ்க்கை தரப் போகிறேன் ஜெயமூர்த்தி கூட இப்படிச் செய்திருக்கிறார்ன்னு நாலுபேர் வியக்கும்படி மனோகரியைத் தக்க இடத்திலே கல்யாணம் செய்து கொடுத்து வாழ வைக்க விரும்புகிறேன். எனது பிடிவாதத்தை மாத்தி எங்க குழந்தையை எங்ககிட்டே கொண்டு வந்து சேர்த்த உங்க மாதர் சங்கத்துக்கு ரொம்ப நன்றி. உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால்...."உணர்ச்சி வசத்தில் குழறினார்.

"எங்கள் மாதர் சங்கத்துக்கு ஒரு தனியான கட்டிடம் தேவை. நிதிக்கு அலைஞ்சு கொண்டிருக்கோம்."

"கட்டாயம் நான் ஒரு கணிசமான தொகை கொடுத்து உதவுகிறேன் அம்மா. நீங்க செய்கிற இந்தச் சேவை சிறந்த சமூக சேவை. உங்கள் மாதர் சங்கம் நல்லா சிறப்பா ஓங்கி வளரணும்னு வாழ்த்தறேன்." தழதழத்தபடி அவர் விடை பெற்றுக் கொண்டார்.

## 20

"எல்லாம் சுபமாக முடிஞ்சுட்டது போலிருக்கே. அந்த ஜெயமூர்த்தி உங்க மாதர் சங்கத்துக்கு ஒரு டொனேஷன் தருகிறதாக ஒப்புக் கொண்டிருக்கிறாரா? பேஷ்...கொஞ்ச நாள் கழிச்சு மனோகரிக்கு நடக்கப் போற கல்யாணத்துக்கு உங்க சங்கத்தாரை அழைச்சுண்டு போவீங்க போலிருக்கே! சாரதா அம்மா ரொம்ப கெட்டிக் காரர்..." ரங்கன் டெலிபோனின் மறு பக்கத்தில் பேச...

"கெட்டிக்காரக் கிழவின்னு சொல்லேன். நான் வயசைப் பத்தி கேட்கவா போறேன் ரங்கா...உன் பங்குக்குக் கொஞ்சம் பாதாம் கேக் எடுத்து வச்சிருக்கேன். மாயாவுக்குக் கொண்டு கொடு. அவளுக்குப் பாதாம் கேக் ரொம்பப் பிடிக்கும். சாயங் காலம் இந்தப் பக்கம் வந்துட்டுப்போ." மகிழ்ச்சியுடன் போனை வைத்தாள்.

பாதாம் கேக்கைப் பிட்டு ஒரு துண்டு வாயில் போட்டுக் கொண்டாள்.

அவள் கண்ட வெற்றியின் இனிப்புடன் அதன் இனிப்பு இணைந்து தொண்டையைத் தூண்டி நெஞ்சில் நிறைத்துக் கொண்டது.

★